

# நமது விளக்கம்

முதல்வர்
கலைஞர் மு.கருணாநிதி

- AUG 1971
MADRAS



# நமது விளக்கம்

தமிழக முதல்வர்
கலைஞர்
மு. கருணாநிதி

முத்து

# நமது விளக்கம்

தமிழ் நாடு அரசின் 1971-72-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை 19—6—71 அன்று சட்டப் பேரவையிலும், சட்ட மன்றத்திலும் தமிழக முதல்வரும் நிதியமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதியவர்களால் அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இரு அவைகளிலும் விவாதங்கள் நடைபெற்றன. இந்த விவாதங்களுக்கு விளக்கமான பதிலளித்து 29—6—71 அன்று சட்டப் பேரவையிலும், 30—6—71 அன்று சட்ட மன்றத்திலும் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து இங்கே வெளியிடுகின்றோம்.

தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற விழைகின்றோம்.

சென்னை
21—7—1971

செய்தி விளம்பரத் துறை,
தமிழ் நாடு அரசு

4 - AUG 1971
MADRAS

## நமது விளக்கம்

*தலைவர் அவர்களே!*

இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது மாமன்றத்து உறுப்பினர்கள் தங்களுடைய விழுமிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கை பற்றி எதிர்ப்பான கருத்துக்களையும், ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்தமைக்காக,—அந்தக் கருத்துக்கள் ஏதாவது ஒரு வகையில் இந்த அரசின் காரியங்களுக்குப்பயன் படும் என்ற நிலையில் நான் நன்றி கூறி வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எடுத்துக் காட்டப்பட்டுள்ள கருத்துக்கள் ஒவ்வொன்றிற் கும் இந்தப் பொது விவாதத்திலேயே நான் பதிலளித்து விடு வது என்பது இயலாத காரியம். உறுப்பினர்களுடைய உரை களுக்கும் நான் தனித்தனியாகப் பதிலளிப்பதற்கு நேரம் இல்லை. இவற்றை அனுசரித்துத்தான், சென்ற ஆண்டிலி ருந்து ஒரு புதிய முறையை நாம் வகுத்துக்கொண்டு பல்வேறு துறைகளிலுள்ள மிக முக்கியமான பிரச்சினைகள் பற்றிப் பேசு வதற்கு சட்ட மன்றத்திலேயும், பேரவையிலேயும் எந்தெந்த மானியங்கள் விவாதிக்கப்படுகின்றனவோ அவைகளைப்பற்றிய மொத்தக் கருத்துக்களை அங்கே விவாதிக்க வழிவகைகள் கண்டு, அவை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அத்த கைய துறைகளைப் பற்றி இங்கே விவாதிக்கப்படுகின்ற நேரத் தில் தொடர்புடைய அமைச்சர் பெருமக்களும் அதற்கு நல்ல விளக்கங்களைத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய உறுப்பினர் கள் பலர், இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே தங்க ளது உள்ளத்திற்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று அவர்களது மனச்சாட்சியே கூறினாலும் இந்த மன்றத்திலே அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கின்ற காரணத்தினால் எதிர்க்க வேண்டிய அவசியத்திற்கு ஆளானார்கள் என்பதை யும் நான் மறந்து விடவில்லை.

''இதிலே புரட்சி எதுவுமே இல்லை, புதுமை எதுவுமே இல்லை'' என்று பத்திரிகைச் செய்திக்குத் தலைப்புக் கொடுத்து விட்டு நமது மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் தனது உரையை நிகழ்த்தினார்கள்.

இதிலே புரட்சியும் புதுமையும் இருக்கின்றதா இல்லையா என்பதை இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற திட்டங்கள்—நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில்தான் தெரியுமே அல்லாமல்—நான் நிதி நிலை அறிக்கையைப் படித்து முடித்ததும்—உடனடியாக இந்த மாமன்றம் தலைகீழாகச் சுழன்று ஒரு பெரிய புரட்சிகரமாக மாறும் என்று நானும் எண்ணவில்லை; மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும் எண்ணியிருக்க மாட்டார்கள்—என்றே நான் கருதுகின்றேன்.

### குளோரோஃபாம் கொடுக்கப்பட்டவர்கள் நிலை

பல உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் புகழ்கின்ற நேரத்தில் நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். ''இதிலே புகழ்வதற்கு என்ன இருக்கிறது? மயக்க மருந்து உட்கொண்டவர்கள், அதாவது 'குளோரோஃபாம் கொடுக்கப்பட்டவர்களைத் தவிர மற்ற யாரும் புகழ முடியாது'' என்று சொன்னார்கள். 'குளோரோஃபாம்' கொடுக்கப்பட்டவர்கள் பேசவே முடியாது; நல்ல டாக்டர்களுக்கு இது தெரியும்!

ஆனால் என்ன காரணத்தினாலோ டாக்டர் ஹாண்டே அவர்கள் பட்ஜெட்டைப் பற்றிப் புகழ்பவர்கள் எல்லாம் 'குளோரோஃபாம்' மயக்கத்திலே இருப்பவர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

### வரிகள் பற்றி இரண்டு கருத்துகள்.

இது பொருளாதாரம் தெரியாமல் தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை என்று டாக்டர் ஹாண்டே குற்றம் சாட்டினார்கள். வரிகள் போடுவதால் விலைவாசி உயரும் என்கிற கருத்தும், உயராது என்கிற ஒரு கருத்தும் மேதைகளால் சொல்லப்பட்டிருக்கிறது. ''கீன்ஸ்மாஸ்கரேஸ்'' போன்ற பொருளாதார மேதைகள் வரிகள் போடுவதால் மக்களிடத்திலுள்ள பணத்தைக் குறைப்பதன் மூலம் விலைவாசி குறையும் என்ற தத்துவத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

### ஏழை-எளியோருக்கு நல்வாழ்வளிப்பதே எங்களுக்குத் தெரிந்த பொருளாதாரம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதுபோல நான் பெரிய பொருளாதார மேதையல்ல; நான் அந்த மேதாவிலாச அடிப்படையிலே இந்த அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறேன் என்று நான் வாய்ப்பறை அடித்துக் கொள்ளவும் தயாராயில்லை!

நானும், எனது கட்சியும் கொண்டிருக்கிற பொருளாதாரம் எல்லாம் இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய சாதாரண நடுத்தரப் பாட்டாளி மக்கள்—தொழிலாளி மக்கள் நல் வாழ்வைப் பெறவேண்டும்; அதற்கு ஏற்ற வகையிலே என் னென்ன திட்டங்கள் தீட்ட வேண்டும் என்கின்ற அடிப்படை யிலே எதை யோசிக்கிறோமோ அதைத் தான் நாங்கள் கொண்டுள்ள அல்லது நாங்கள் சிறப்பாகப் போற்றுகின்ற பொருளாதாரமாகக் கருதிக் கொண்டிருக்கின்றோம்.

### நல் அரசின் இலக்கணத்திற்கொப்ப நமது நிதிநிலை அறிக்கை

மத்திய அரசு இன்றைக்கு இந்தமாநில அரசிற்கு இட்டிருக் கின்ற கட்டளையின்படி ஆண்டு ஒன்றுக்குத் திட்டத்தின் வாயி லாக 70 அல்லது 80 கோடி ரூபாய்தான் செலவிடலாமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில் அந்த 70கோடி ரூபாய் அல்லது 80கோடி ரூபாய் என்ற வரையறையில் திட்டங்களை வரையறுப்பது முடியாது என்ற காரணத்திற்காக, நமது ஓராண்டுத் திட்டத்தை 100 கோடியிலிருந்து 105 கோடி ரூபாய் வரையில் உயர்த்தி, அதற்காக நிதிவகைகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்கின்ற நல்ல அரசினுடைய இலக்கணத்துக்கு உட்பட்டு, வழிவகைகளை எல்லாம் ஆராய்ந்து இந்த அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது.

### மூலதனக் கணக்கும்—முதலீடு செய்வதும்.

ரெவின்யூ கணக்கை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கேற்ற வகையில் வரிகளைக் குறைக்கலாமென்று நண்பர் மாரிமுத்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். மூலதனக் கணக் கையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்துத்தான் மொத்த வரு மானம் எவ்வளவு, மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும் சேர்த்து ஊதிய உயர்வை எப்படிச் சரிக்கட்டுவது என்று ஆராய்ந்து மூலதனக் கணக்கிலே தொழில் வளர்ச்சிக் கென்று நாம் முதலீடுகள் செய்ய வேண்டியிருக்கிறது.

### மக்கள் வசதிக்குத் தான் நிதிநிலை அறிக்கையே தவிர அரசுக்கு ஆதாயம் தேடுவதற்கல்ல!

கட்டடங்கள், பொதுத் துறை என்ற தலைப்பிலே பல்வேறு கட்டடங்கள் அரசுக்கு ஆதாயம் கிடைக்காத வகையிலே யும் பல்வேறு வசதிகளை இயற்ற வேண்டிய நிலையிலே இருக்கிறோம் நாம்.

இவைகளெல்லாம் மக்களுடைய வசதிக்காகத் தானே தவிர அரசுக்கு ஆதாயம் வரவேண்டுமென்ற நோக்கத்தில் நாம் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவில்லை.

எனவே இந்த மூலதனம் என்ற அம்சத்திலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளவோ, ஒளிந்து கொள்ளவோ முடியாத நிலையிலிருக்கிறோம். இது போன்ற மூலதனச் செலவுகளுக்கு வருவாய்க் கணக்கிலேதான் நிகர மிச்சத்தை நாம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இதை நண்பர் மாரிமுத்து அவர்களுடைய சந்தேகத்திற்கு விளக்கமாகத் தெரிவிக்கிறேன்.

அந்த மிச்சம் போதாத காரணத்தினாலேதான் மொத்தமாக எல்லாக் கணக்கிலேயும் விழுகின்ற துண்டு எவ்வளவு என்று நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

**வரவு-செலவுத் திட்டத்திலுள்ள வரவேற்கப்படும் திட்டங்கள்.**

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உறுப்பினர்கள் வரவேற்கும் திட்டங்கள் ஏராளம். ஆனால் தோழமைக் கட்சியிலேயுள்ள சில பேர் கூட, குறிப்பாக திரு.மணலி கந்தசாமி அவர்களைப் போன்ற ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் மக்கள் நல்வாழ்வுக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டங்களைப், பாராட்டாமலிருப்பது, என்னைப் பொறுத்தவரை ஒரு மனக் குறை தான்!

ஒருவேளை முதல்வர் தஞ்சாவூர்க்காரர் என்பதால் திரு. மணலி கந்தசாமி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கக் கூடும்.

''இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்வதற்கு விற்பனை வரியிலே அரை சதவீதம் உயர்த்தினால்தான் என்ன'' என்று அவர்கள் கேட்ட நேரத்தில், எனக்கு மிகத் தெம்பாக இருந்தது.

இவ்வளவு தூரம் பழுத்த அனுபவம் வாய்ந்த ஒரு நல்லவருடைய—வல்லவருடைய ஆதரவு இந்த அரசுக்கு இந்த வரி விதிப்பிலே கிடைத்து விட்டது என்பதிலே எனக்கு நிறைய மகிழ்ச்சி!

ஆனால், மணலி பேசிய பிறகு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் தமக்கு இடையே நடத்திய இரகசியக் கூட்டத்திலே என்ன முடிவு எடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் நேற்றைய தினம் இந்த வரியை எதிர்த்துப் பேசியதோடு இன்றைக்கும் அதன் தொடர்பாகப் பேசியிருக்கிறார்கள்.


இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நமது நண்பர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிச் சார்பில் பேசிய திரு. ஆறுமுகசாமி அவர்கள் ''பல முழுமையான சோஷலிச நடவடிக்கைகளைக்

கொண்டது'' என்று குறிப்பிட்டார்கள். நான் இங்கே விவா தத்திற்குப் பதிலளிக்கிற நேரத்தில் அவர் சொன்னதையே எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அந்த இலட்சியத்தைக் கொண்டுவரவேண்டுமென்ற முனைப் போடு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நல்லெண்ணம் கொண்டவர்கள், ஆர்வம் கொண்ட வர்கள் எவரும் மறுக்க முடியாது என்று நம்புகிறேன்.

### ஏழைகள் ஏற்றம்பெற . . .. ... ...

அதற்கேற்ற வகையிலே தான் இந்த நிதிநிலை அறிக் கையிலே பல்வேறு அம்சங் கள், ஏழை எளிய மக்களைத் தொழிலாளத் தோழர்களை, பாமர மக்களைப், பாட்டாளி மக்களைத் தொடக்கூடிய பல்வேறு அம்சங்கள் இணைக் கப்பட்டிருக்கின்றன. விவ சாயத் தொழிலாளர்களை, அவர்கள் குடியிருக்கிற மனை களிலிருந்து எந்த நேரத் திலும் வெளியேற்றப்பட லாம் என்கிற கொடுமை நீண்ட பல ஆண்டுகளாக நிலவுகிறது.




அந்தக் கொடுமையி லிருந்து அவர்களைப் பாது காக்க வேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்தோடு விவ சாயத் தொழிலாளர்கள் வெளியேற்றப் படாமலிருக்க வேண்டும் என்பதற்காகத் திட்டம் தீட்டியுள்ளோம். அவர்கள் வெளியேற்றப்படாமலிருப்பது மாத்திரமல்ல, அவர்கள் குடியிருக்கின்ற மனைகள் அவர்களுக்கே சொந்த மாக்கப்பட வேண்டும் என்ற முடிவினை ஏற்றிருக்கின்றது எமது அரசு.

மாநில முழுவதிலும் இந்த நிலையை உருவாக்கத் திட்ட மிட்டுள்ளோம். அதற்கு முதற் கட்டமாகத் தஞ்சைத் தரணி யில் இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருக்கின்ற மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்குகின்ற அளவிற்கு ஒரு திட்டத்தை நான் இன்றைக்கு வகுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசின் சார்பிலே வெளியிட்டிருக் கிறோம்.

இன்று இலட்சக்கணக்கான நிலமற்ற ஏழை விவசாயிகள் நிலப்பட்டா, மனைப்பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டாவை இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது என்றாலும் நான் பல முறை அறிவித்ததற்கிணங்கக் காடுகள் என்ற பெயரால், ஆனால் உண்மையில் காடுகளாக இல்லாமல் இருக்கிற நிலங்களைக்கூட நிலமற்ற விவசாயிகளுக்குத் தந்திட வேண்டும் என்கின்ற அடிப்படையை அமைத்து அந்தத் துறையினுடைய அமைச்சர் மாநிலத்திலே பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று ஆராய்ந்து பார்த்து வந்து, அந்த நிலையிலே இன்றைக்குக் காட்டு நிலங்களில் 50 ஆயிரம் ஏக்கரா வரையில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஒப்படை செய்து கொடுப்பது என்ற முடிவினை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.



இதிலெல்லாம் கேரளாவைப் பின்பற்ற வேண்டுமென்று திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறினார்கள்.

### ஏழைகள் வாழ்வில் புதுமைகள், புரட்சிகள் !

கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி முதன் முதலாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த ஆண்டு 1957. அந்த ஆண்டிலேயிருந்து 1971-ஆம் ஆண்டுவரை கிட்டத்தட்ட ஒரு பதின்மூன்று, பதினான்காண்டுக் காலம்—அவர்கள் தொடர்ந்து ஆட்சிப் பீடத்திலே இல்லாவிட்டாலும்—அந்தக் கொள்கைகள் கேரள மாநிலத்தில் பரவலாக்கப்பட்டு, அதற்கு எற்றவண்ணம் அந்த மண் பக்குவப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது !

ஆனால் கேரளாவிற்குக் கிஞ்சிற்றும் சளைக்காத அளவுக்குப் புதுமைகளையும், அமைதியான புரட்சிகளையும், எழை எளியோர் வாழ்க்கையிலே செய்திட வேண்டும் ; ஏழைகள் நிமிர்ந்து நடக்கவும் அவர்கள் முகத்திலே புன்னகை காணவும் வழி பிறக்கவேண்டுமென்று எண்ணிச் செயலாற்றுகின்ற இந்த அரசு, ஆட்சிப் பெறுப்பேற்று எத்தனை ஆண்டுக்காலமாகிறது என்பதனையும், இடையிலே எவ்வளவு சோகப்புயல்களை எல்லாம் ஆளும் கட்சி தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதனையும் உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

## பேருந்துகள் தேசிய மயம்.

பயணிகள் பேருந்துகள் தேசிய மயமாக்கியிருப்பதை நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள்; அவைகளுக்கு உச்சவரம்பு கட்டப் பட்டிருப்பதையும் வரவேற்றிருக்கிறீர்கள்.

பயணிகள் பேருந்துகளைத் தேசியமயமாக்கியது பற்றி—நாட்டுடைமை ஆக்கியது பற்றி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் முற்போக்கு எண்ணம் படைத்த வேறு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

நண்பர்கள் சுவாமிநாதன் போன்றவர்கள், நம்முடைய சுதந்திராக் கட்சியின் தலைவர் திரு கணேசன் போன்றவர்கள் எல்லாம், ''நீங்கள் இப்போது நடத்துகிற பேருந்து நிர்வாகத்தையே ஒழுங்காக நடத்த முடியவில்லை. இதையும் எடுத்துக் கொண்டு எப்படி நடத்தப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

இப்படிக் கேட்டவர்களில் இரு சாரார் உண்டு: பொது உடைமை தேவை என்று கேட்டவர்களும் உண்டு; நீங்கள் நடத்த முடியாது—ஆகவே இந்தக் கொள்கை தேவையில்லை என்ற அடிப்படையில் கேட்டவர்களும் உண்டு.

அவர்கள் யார் யார் என்று பகுத்துச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் அன்றைக்கே விளக்கம் அளித்தேன். சென்னை நகரில் ஓடுகிற பேருந்துகள் மூலம் அரசுக்கு நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. வெளியூர்களில் ஓடிக்கொண்டிருக்கிற—பல ஊர்களை இணைத்துக் கொண்டு ஓடுகிற பயணிகள் பேருந்துகள் மூலமாக நமக்கு லாபம் தான் கிடைக்கிறது. இங்கே ஏற்படுகிற நட்டத்தை ஓரளவு சரிக்கட்டுகிற அளவுக்கு வெளி ஊர்களில் ஓடிக் கொண்டிருக்கிற பஸ்களின் மூலம் நமக்கு லாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது நாம் நாட்டுடைமையாக்குகிற பஸ்கள் எல்லாம் வெளியில் ஓடிக்கொண்டிருக்கிற பஸ்கள் என்கிற காரணத்தால் அவைகளையும் நாம் தனித்தனி நிர்வாகமாக நடத்த வேண்டியதில்லை என்ற காரணத்தால் நட்டம் ஏற்பட வழியில்லை.

நிர்வாகத்தில் இருக்கிற குறைபாடுகள் பற்றி நீங்கள் எடுத்துச் சொன்னதை நான் அப்படியே மறுக்கிறேன் என்று தவறாகக் கருத வேண்டாம். அந்த நிர்வாகத்தை மேலும் சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்கான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறோம்.

நண்பர் சுவாமிநாதன் பேசுகிற நேரத்தில் அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டி கூடக் கொடுக்காமல் கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் உங்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. அரசுக்குக் கொடுக்க வேண்டிய வட்டியும் சேர்த்தால் ரூபாய் இரண்டரைக் கோடி அளவுக்கு நட்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள்.

## நட்டம் ; ஒரு விளக்கம் !

நான் அவர்களுக்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வட்டிக்காகக் கொடுக்க வேண்டிய வட்டித் தொகையைக் கொடுத்த பிறகுதான், இந்த நட்டமே தவிர வேறு அல்ல.

திரு கே. ராசாராம் : ஆனால் அரசுக்கு இந்தப் போக்குவரத்துத் துறை வருமான வரி செலுத்துவதில்லை. தனியார் ஓட்டுகிற பஸ் கம்பெனிகள் வருமான வரி செலுத்துகிறார்கள். இதை அரசு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.




முதல்வர் : வருமானம் இருந்தால் வரி செலுத்துவார்கள். வருமானம் இல்லாமல் இருக்கிறதால் வருமான வரி செலுத்த முடியாது. ஆனால் மற்ற வரிகள் எல்லாம் செலுத்தப்படுகின்றன.

ஆகவே வட்டிக்காக அரசுக்குக் கொடுக்கப்பட்ட தொகை போக ஏற்படுகிற நட்டம்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறதல்லாமல் வட்டியும் கொடுக்காமல் நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கருதுவது சரியல்ல.

நிர்வாகத்தில் உள்ள கேடு பாடுகள் எவை எவை, எந்த எந்தக் காரணத்தால் இந்தச் சீர்குலைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்திடவும், ஆராய்ந்திடவும் இப்போது பரீட்சார்த்தமாக, சில 'டிப் போக்களில்' ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

அவை மிக வேகமாக விரைவு படுத்தப்பட்டுத் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை சீர்படுவதற்கு எங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வோம்.

## வேலே வாய்ப்பு வசதிகள்.

வேலே வாய்ப்பிற்காக வழி செய்திருக்கிறோம் என்பதையும் இம்மாமன்றத்தின் உறுப்பினர்களாகிய நீங்கள் வரவேற்கிறீர்கள்.

காவல் துறைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் 1,000 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இன்சினியர்கள் 3,000 பேருக்குச் சிறு தொழில் துவங்கக் கடனுதவி செய்யப்படும். பட்டதாரி மாணவர்கள் 2,000 பேருக்கு 'இளைஞர்கள் அணி' மூலமாக வேலேவாய்ப்புத் தரப்படும். கிராமப் புறங்களிலே, 15 ஆயிரம் பேருக்கு வேலே வாய்ப்பளிக்க மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்குக்கிடைக்கும் தொகை—போதாதென்று வாதாடி வருகிறோம். முடிவு தெரியும் வரையிலே காத்திராமல் நம் மாநில அரசின் மூலமாக மேலும் 15 ஆயிரம் பேருக்கும் வேலே வாய்ப்பளிக்கிறோம். ஆக 30 ஆயிரம் பேருக்குக் கிராமப்புறங்களிலே வேலே வாய்ப்புத் தருகிறோம். இவையன்றி, 150 மருத்துவர்களுக்கும், 200 செவிலியர்களுக்கும் வேலே வாய்ப்புத்தருகிறோம். இது போன்ற சூழ்நிலேகள் எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன.

## தகுதி திறமை உள்ளவர்களுக்கே தேர்வு.


இதிலே கட்சிக் கண்ணோட்டம் இருக்கக் கூடாதென்று எதிர்கட்சித் தரப்பிலே யிருக்கின்றவர்களும் தோழமைக்கட்சியிலே உள்ளவர்களும் எடுத்துரைத்ததை நாங்கள் மறந்துவிட மாட்டோம். இதற்கெல்லாம் தகுதியானவர்கள்—இதற்கு ஆற்றல் படைத்தவர்கள் ஆகியவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்களே தவிர இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இவர் இவரை அறிவார்; எனவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிற அளவிலே—தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தகுதி, திறமை யாருக்கிருந்தாலும்—அவர்கள் அதுவரை எந்தக் கட்சியிலே இருந்தாலும்—அவர்கள் உள்ளத்திலே எந்தக் கட்சி உணர்வு இருந்தாலும்—அவைகளேப் பற்றி எல்லாம் கவலேப்படாமல்—திறமைசாலிகள் தான்—இந்த அரசினுடைய கடமைகளே ஒழுங்காக நிறைவேற்றக் கூடிய ஆற்றலுள்ளவர்கள்தான்—தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; இது உறுதி!

மிக முக்கியமான வேலே வாய்ப்பு, வேலேயில்லாத் திண்டாட்டம், இந்திய பூபாகம் முழுவதும் இன்றைய தினம் இது பரவிக் கிடக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லே.


எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே "வேலை வாய்ப்புக்கு இந்த அரசு தீட்டியிருக்கிற திட்டங்களை நான் வரவேற்கிறேன். ஆனால் யானைப் பசிக்கு இது சோளப் பொரியாகப் பயன்படும். எனவே இந்தவேலை வாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டு"மென்று நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே நல்ல சிந்தனையோடு குறிப்பிட்டார்கள்.

இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதைப் பிரச்சாரத்திற்காகப் பயன் படுத்துகிற நண்பர்கள் இதைக் காரணமாகக் கண்டுபிடித்துத் திரு ராஜாராம் நாயுடு வேலை வாய்ப்புத் திட்டத்தை யானைப் பசிக்கு சோளப் பொரி என்று பேசினார்கள் என்கிற அளவிலே பத்திரிகையில் போடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த அளவிற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்பதும் எனக்குத் தெரியும். என்றாலும் இந்த அரசு இந்த நிலையை உணர்ந்திருக்கிறது என்பதையாவது ஒப்புக்கொண்டார்; அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



## அவர்கள் ஒதுக்கியது எவ்வளவு ?

இந்த அளவுதான் இந்த அரசால் முடிகிறது. மாநிலத்திலே நமக்கு இருக்கிற நிதி வாயில்களைக் கொண்டு,—நம்முடைய வருவாயைக் கொண்டு நமக்கு இருக்கிற அதிகாரங்களைக் கொண்டு—இதனைத்தான் நம்மாலே செய்ய முடிகிறது.




அவர்கள் சுட்டி காட்டியது போ 50 கோடி ரூபாயை இந்தியா முழுவதற்கும், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு இந்தியப் பேரரசு ஒதுக்கியது. இதைக் கூடச் சரியாகப் புரிந்து கொள்ளாத நம்முடைய தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர்கள் ஏதோ தமிழ் நாட்டிற்கே 50 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதாகக் கருதி அதைப் பற்றி விமரிசித்தார்கள்.

இந்த 50 கோடி ரூபாயிலே இவர்கள் யார் யாருக்கு எவ்வளவு பங்கு போட்டுக் கொள்ளப் போகிறார்களோ என்றார்கள். அதற்குள் ஓர் ஆதங்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. உண்மையில் 50 கோடி ரூபாய் என்பது இந்தியா முழுவதற்கும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. இப்படி ஒதுக்கப்பட்ட நேரத்திலே அவர்கள் மிகுந்த தந்திரத்தோடு மாவட்டத்திற்கு 15 ஆயிரம் பேர்களுக்கு என்று அல்ல, ஒரு மாநிலத்திற்கு 15 ஆயிரம் பேர்களுக்கு வேலை என்கிற அந்த அளவிலே வகுக்காமல், அல்லது கோட்டத்திற்கு, ஒரு பிளாக்கிற்கு இவ்வளவு பேருக்கு என்கிற அந்த அளவிலே வகுக்காமல், மாவட்டத்திற்கு ஆயிரம் பேர்களுக்கு வேலை என்று யாரோ மத்திய சர்க்காரிலே இருக்கிற ஒரு கெட்டிக்காரரர் இந்தத் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.


நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் மாவட்டங்கள் எண்ணிக்கையிலே குறைவு, பரப்பளவிலே பெரிது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல வடபுலத்திலே இருக்கிற மாநிலங்களில் மாவட்டங்கள் எண்ணிக்கையிலே அதிகம். பரப்பளவிலே குறைவானவை.

சில இடங்களில் உத்தரப் பிரதேசம் போன்ற இடங்களில் 54 மாவட்டங்கள். மராட்டியம் போன்ற இடங்களில் 26-க்கு மேற்பட்ட மாவட்டங்கள் ;34-க்கு மேற்பட்ட மாவட்டங்கள் இருக்கின்றன.

அவ்வாறு மாவட்ட அளவிலே கணக்கிட்ட நேரத்தில் நமக்கு வர வேண்டிய தொகை நமக்கு வராமல் போய் விட்டது. ஆகவேதான் ஒரு கோடியே சொச்சம் என்கிற அளவிற்குத்தான் கிராமப்புற வேலைவாய்ப்புக்கு நமக்குப் பணம் ஒதுக்கப்பட்டது. அதிலே 15 ஆயிரம் கிராமப் புறத்து மக்களுக்குத்தான் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் ஊதியம் தரலாம் என்கிற அடிப்படையில் வேலைவாய்ப்பு நம்மாலே உருவாக்க முடிந்தது. அதிலே ஒரு மாவட்டத் திலே 10 பிளாக்கிற்குத்தான் கொடுக்க முடியும் என்கிற சூழ்நிலை உருவாயிற்று. ஆகவே மேலும் ஒரு கோடி ரூபாய் நமது மாநில அரசின் சார்பிலே செலவு செய்வது என்று தீர்மானித்து மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பிளாக்குகள், 20 பிளாக்குகள் என்கிற அளவிலே நிர்ணயித்து 15 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்கிற அளவிற்கு இன்றைக்கு நாம் உருவாக்கியிருக்கிறோம். அவர்கள் சொன்னார்கள் அப்படி வேலைவாய்ப்புத் தருகிற நேரத்திலே முற்றிலும் வேலை வாய்ப்பு அற்ற குடும்பங் களுக்குத்தான் இதைத் தரவேண்டும்—முதல் சலுகை, முன் உரிமை தர வேண்டும் என்று சொன்னார்கள். அவர் கள் இப்படிச் சொன்னார்கள் என்றாலும் இதற்கு முன்பே அதிகாரிக்கு, அந்தக் குழுக்களுக்கு, நாங்கள் தந்திருக்கிற ஆணையின்படி இதை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். வேலையில்லாமல், யாரும் வேலைவாய்ப்பு இல்லாமல், இருக்கிற குடும்பத்தில் இருக்கக் கூடியவர்கள் முன் உரிமை தர வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதையே நாங்கள் முன்பே அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டோம் என்பதை நான் இங்கே தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

காவல்துறையில் எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேறியவர்கள் இரண்டாயிரம் பேர்களுக்குப் பதவி ஒதுக்கம் செய்யப்பட்டு அதிலே ஆயிரம் பேர்களை நேரிடையாக வேலைக்கு எடுத்துக் கொள்கிற ஒரு வேலை வாய்ப்புத் திட்டத்தை நாம் உருவாக்கி யிருக்கிறோம். தொழில் கல்வி பயின்றவர்களுக்கு 30 ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் சிறுதொழில்களை உருவாக் கிக் கொள்வதற்குக் கடன் வசதி அளிக்க இந்த அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. பட்டதாரி மாணவர்களைக் கொண்டு இளைஞர் அணி என்ற ஒன்றைத் தயாரித்து நல்ல சமூக சேவை செய்வதற்குக் கிராமப்புறங்களில் நல்ல பணிகளைச் செய்வதற்கும், தீய பழக்க வழக்கங்களிலிருந்து கிராமப்புற மக்களை விடுவிப்பதற்கும் பட்டதாரிகள் நிறைந்துள்ள இளைஞர் அணியைப் பயன்படுத்த வேண்டு மென்றும், இரண்டாயிரம் இளைஞர்களை அந்த அணியில் திரட்டுவதற்கும் அவர்களுக்குப் பொறுப்புத் தரவேண்டும் அவர்களுக்கு மாத ஊதியமாக ரூபாய் 175 கொடுக்க வேண்டு மென்றும் இந்த வரவு செலவுத் திட்டத்திலே வகை செய்

யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களில் 6,500 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. அதில் சில குறை பாடுகள் சொல்லப்பட்டன என்றாலும் அது கிடைத்தால் போதும் என்கிற அளவிற்கு இன்றைய தினம் வேலைவாய்ப்பு அற்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதை நாம் மறந்து விடுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி அவர்கள் என்று கருதுகிறேன்—தனியார் பள்ளி களில் ஆசிரியர்கள் முழுச் சம்பளம் வாங்கிக் கொண்ட தாகக் கையெழுத்துப் போட்டுவிட்டுப் பாதிச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றார்கள். அந்த அள விற்கு வேலை வாய்ப்புப் போதும் என்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தொழில் பயிற்சி மூலம் அவர்களுக்கு இந்த அரசின் சார்பில் தரப்படுகிற இந்த உதவியை அவர்கள் புறக்கணித்து விட மாட்டார்கள், ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என் பதை நான் இங்கே எடுத் துக் காட்ட விரும்புகிறேன். அதே போல 2,400 பொறி யாளர்களுக்கு நாம் வேலை வாய்ப்பு அளித்திருக்கிறோம். பின்தங்கிய அரிசன மக் களுக்கும் ஏராளமான




சலுகைகளை வழங்கியிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஏற்கனவே ஆரம்பித்த திட்டம் என்று அவர்கள் எடுத்துக்காட்டினாலும், அது விரிவுபடுத்தப் படுகிறது. சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்து வோருக்கும் ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் தொழில் கருவிகள் வாங்குவதற்கு உதவி செய்வதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்திலே நாம் திட்டம் வகுத்திருக் கிறோம். இவை அவ்வளவையும் சொல்லிவிட்டு, இவைகள் போதாது என்று கூறிவிட்டு ஆனால் வரிகள் போடக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய உரையிலே குறிப் பிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற காரணத்தினால் இப்படிச் சொன்னார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஒரு காலத்தில் இந்தப் பக்கத்தில் இருந்தவர்; எதிர்க்கட்சியினர் வரிகள் போட்டதைக் கண் டித்துக் கேள்விக்கணைகளைத் தொடுத்த நேரத்தில் பதில் அளித் தவர். ஆகவே கேள்வி கேட்கிறவர்கள், பதில் சொல் கிறவர்கள் மாறி, மாறி வருகின்ற நிலைகள் ஜனநாயகத்திலே வியப்புக்குரியதல்ல. ஆகவேதான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற காரணத்தினால் இவ்வளவையும் சொல்லிவிட்டு, யானைப் பசிக்குச் சோளப்பொரியைப் போட்டிருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, இன்னும் பல திட்டங்கள்

இங்கே நிறைவேற்றப்பட வேண்டுமென்று எல்லாத் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்து விட்டு, ஆனாலும் வரிகள் போடலாமா என்கிற ஒரு கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள்.

### பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம்.

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ஒரு திட்டத்தை இந்த அரசு தயாரித்து, அதற்காக நிதியினைத் திரட்டி வருகிறோம்.

இதைப் பற்றிப் பொன்னப்ப நாடார் அவர்கள் "நல்ல திட்டம்; இதில் ஊழல் நடந்து விடக்கூடாது" என்று குறிப்பிட்டார்கள். எல்லாத் திட்டங்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக்கூடாது.

நாம் நிதி சேர்க்கிறோம்—பிச்சைக்காரர்களுக்கு! அதிலேயே சில பேர் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்கள் பிச்சைக்காரர்களுக்குத் துரோகம் செய்கின்ற கொடியவர்கள்; தீயவர்கள் என்கின்ற கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டுமே அல்லாமல் இதற்கெல்லாம் ஏன் "சீரியல் நம்பர்" போடவில்லை என்று கேட்பதிலே அர்த்தமில்லை.

கொடி நாள் என்று எத்தனையோ ஆண்டுக் காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்தக் கொடி நாளில் கொடிகளுக்கு விலை இவ்வளவு என்று குறிப்பிடப்படுகிறது.

அந்தக் கொடிகள், பள்ளிகளில் சிறார்களிடத்தில் குறிப்பிட்ட தொகைக்கு விற்கப்படுகின்றன. அப்படி விற்கப்படுகின்ற எந்தக் கொடிக்கும் சீரியல் நம்பர் போடப்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆகவே, அச்சடிக்கப்பட்ட அட்டைகள் எவ்வளவு என்பதற்குக் கணக்கு உண்டு. வேறு யாரும் அச்சடிக்க முடியாதபடி அதிலே என்னுடைய கையெழுத்துப் பதிக்கப்பட்டிருக்கிறது.

உத்தமர் காந்தியடிகள் தொழு நோய்ப் பிச்சைக்காரர் ஒருவருக்குச் சிகிச்சையளிக்கின்ற படம் இன்னொரு புறத்திலே பொறிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக் கணக்கிட்டு, ஒவ்வொரு இடத்திலும் தரப்பட்டு, இதன் மூலமாக இந்த நிதிக்கு இவ்வளவு தொகை வரவேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே தவறு நடந்து விடாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். தவறுகள் சுட்டிக்காட்டப்படுமேயானால் அரசு சார்பில் ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நான் தயாராயிருக்கிறேன்.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு என்கிற திட்டத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பிச்சைக்காரர்களின் மேல் வைத்துள்ள அன்பின் காரணமாகவும், பற்றின் காரணமாகவும்—பற்றின் காரணமாக என்றால் அந்த வட்டாரத்திலே

உள்ளவர்களுக்கு அவர் மீது கோபம் பிறக்கும்—ஆகவே அவர்கள் பிச்சைக்காரர்கள் மேல் வைத்திருக்கிற அன்பின் காரணமாக—அவர்கள் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையெல்லாம்—நேருவின் பிறந்த நாளைக் குழந்தைகள் தின மாகக் கொண்டாடுவது போல—இதைப் பிச்சைக்காரர்கள் தினமாகக் கொண்டாடலாம் என்று சொன்னார்கள்.

ஐந்து ஆண்டுக் காலத்தில் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுப் பிச்சைக்காரர்களின் கூட்டமே தமிழ்நாட்டில் இல்லாதவாறு ஆக்க வேண்டுமென்று கருதுகிறேன்.


பண்டித நேரு அவர்கள் பிறந்த தின விழாவை குழந்தை கள் தினமாகக் கொண்டாட வழியிருக்கிறது. பண்டித நேரு மறைந்து பல ஆண்டுகளானாலும் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கும்.

ஆனால் இந்தப்பிச்சைக்காரர்கள் பிரச்சினை சரிசெய்யப்பட்டு விட்டால் பிறகு பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு தினத்தைக் கொண்டாட முடியாது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் புரிந்து கொண்டு வேறு ஒரு யோசனையைச் சொல்ல வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

### குடிசை மாற்று வாரியம்.

நாம் இன்னும் பல பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக் கிறோம். சென்னை மாநகரத்தில் ரூ. 40 கோடியில் திட்ட மிட்டு ஏழாண்டுக் காலத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டித் தருவதற்கு நாம் பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

இது பல்லாண்டுக் கால மாகத் தீர்க்கப்படாமல் இருக்கிற ஒரு பயங்கரமான பிரச்சினை. அந்தப் பிரச் சினையை இந்த அரசு இன்றைய தினம் வெகு துணிவோடு ஏற்று, அதை நடத்திவைக்க வேண்டு மென்ற ஆர்வத்தின் காரண மாக இந்த ஆண்டு மாத்திரம் 4 கோடி ரூபாய் அதற்காகச் செலவழிப்பது என்று திட்ட மிட்டு அந்தப் பணி நடை பெற்றுக்கொண்டு வரு கிறது.




அதைப் போலவே தமிழ்நாட்டில் குடிநீர் வாரியம் ஒன்றின் மூலமாகப் பல கோடி ரூபாய் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இன்னும் சில பல ஆண்டுகளில் எல்லாக் கிராமப் புறத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் திட்டம் தீட்டி அந்தத் துறையிலும் வெகு வேகமாகப் பல முற்போக்குக் காரியங்களைச் செய்திருக்கிறோம்.

இவைகளை யெல்லாம் எந்த அடிப்படையில் நாம் செய்து வருகிறோம் என்பதைத் தான் இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற நேரத்தில் எடுத்துக் காட்டினேன். ஏழை எளியவர்கள்—கிராமப்புறத்து மக்கள்—இது வரையில் தங்களையே சரிவர உணர்ந்து கொள்ள முடியாமல் எங்கோ அழுத்தப்பட்டு தள்ளப்பட்டுக் கிடந்த பிற்போக்கான நிலையில் உள்ள மக்கள், வாழ்வில் விடிவு ஏற்பட வேண்டுமென்பதற்காக இவ்வளவு முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொன்ன திட்டங்களால் மட்டும் நமது மாநிலத்தின் தேவைகள் பூர்த்தி அடைந்து விடுமா என்றால் இல்லை. இன்னும் ஏராளமான தேவைகள் இருக்கின்றன. அந்தத் தேவைகளையெல்லாம்—இங்கே பேசிய உறுப்பினர்கள்—தொகுதி வாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மூவர் குழு.

இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மறுபடியும் நீங்கள் விரும்பினால் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து படித்துக் கொள்ளலாம் என்கிற நிலைமை இருந்து வந்திருக்கிறது. அவைகளில் சில மறந்தும் விடலாம்; கூடிய வரையில் இந்த நிலைமைக்கு இடம் தராத வகையில் தங்கள் தங்கள் தொகுதிகளைப்பற்றிக் கோடிட்டுக் காட்டுகின்ற எந்தப் பிரச்சினையானாலும் அவைகளை ஆராயத் தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வாரிய உறுப்பினர்



களில் ஒருவர், ஆக மூவர் கொண்ட குழு அமைக்கப்பெற்று, அந்தக் குழு, இங்கேபேசிய உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து ஒவ்வொரு துறையின் தலைவர், துறையினருடைய செயலாளர்கள்—அலுவலர்கள் இவர்களோடு கலந்து ஆராய்ந்து, அமைச்சர் அவைக்கு அறிக்கைகளை அறிவித்து, அதிலே பெரும்பாலானவற்றை இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலேயே நிறைவேற்ற வழி வகைகள் வகுக்கும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காகத் தான்—நாம் எப்படியும் தவிர்த்து விடலாம் என்று எண்ணினுல்கூட வரிகளின் மூலம் அவற்றிற்குத் தேவையான நிதிவாயில்களைப் பெருக்க வேண்டியவர்களாயிருக்கிருேம்.

உறுப்பினர்களின் ஊதியம்.

இடையில் நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்கள் எழுப்பிய கோரிக்கைக்கு நான் பதில் அளித்தாக வேண்டும் என்று கருதுகிறேன். அவர்கள் சொன்னுர்கள்—அப்பட்டமாகச் சொல்லாமல்—எங்களைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னுர்கள்.

எல்லா உறுப்பினர்களுக்கும் இந்த ஆசை இருப்பது தெரியாமல் இல்லை. அதில் யார் மணி கட்டுவது பூனைக்கு என்பதில் தான் ஒருவருக்கொருவர் போட்டியே தவிர, இதில் கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் தான் எல்லோருக்கும் இருக்கிறது.

இதைப் போலவே ரூ. 150 இருந்த காலத்தில் ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டது. எல்லாக் கட்சியிலுள்ள உறுப்பினர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அதைப் போலவே நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்களின் கோரிக்கையும் விரைவில் ஏற்கப்படும்.

எந்த அளவுக்குத் தொகை என்பதை நான் இப்போது கூற விரும்பவில்லை. ஏனென்ருல் அதுபற்றிய மானிய விவாதம் வருகிற நேரத்தில் அதைப் பற்றி அந்த மானியத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிற அமைச்சர் வாயிலாக அது தெரிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தேவைகள் நமக்கு நிறைய இருக்கின்றன. மற்ற உறுப்பினர்களுக்கும் தேவைகள் இருக்கின்றன. அதையும் நிறைவு செய்ய வேண்டியிருக்கிறது. இன்னும் நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைகள் ஏராளம் இருக்கின்றன. அதையும் நான் உணர்கிறேன்.

அதற்காகத் தான் நிதி வாயில்களைப் பெருக்குவதற்கு வேறு எந்த வழியும் இல்லாத காரணத்தால் வரிகளை நாம் தேடிப் போக வேண்டியிருக்கிறது.

### கழக அரசின் வரிக்கொள்கை

அப்படி வரிகளைத் தேடிப் போகிற நேரத்தில் கூடுமான வரையில் தாங்கக் கூடியவர்களைத் தொடக் கூடியதாகவும், தாங்க இயலாதவர்களுக்குப் பாதகம் ஏற்படுத்தாத வகையிலும் அந்த வரிகள் இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதுதான் கழக அரசினுடைய வரிக் கொள்கையாகும்.

அதற்கேற்பத்தான் விற்பனை வரியை மூன்று சதவீதத்திலிருந்து மூன்றரை சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். அதிலும் சட்டமன்றத்தில் நேற்றைக்கு முன் தினம் பல சலுகைகள் அளிக்கப்பட்டு மொத்த 'வணிக வரம்பு' ரூ. 15 ஆயிரம் என்று இருந்ததை ரூ. 25 ஆயிரம் என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். அதைப் போலவே 'கம்பவுண்டிங்' ரூ. 75 ஆயிரம் என்று இருந்ததை ஒரு லட்சம் என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம்.

பல பெரிய நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஒரு சிறிய பளுவை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்த வரியை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

விற்பனை வரி, மேல்வரிப் பிரச்சினையிலும் பொதுமக்களுக்கு அதிகமாகக் கஷ்டங்கள் ஏற்படப்போவதில்லை. ஏதோ பத்திரிகைகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாக வணிகர்கள் கொந்தளிப்பு, வியாபாரிகள் புரட்சி என்ற செய்திகள் இரண்டொரு நாள் வரும். ஆனால், இது உண்மையிலேயே வியாபாரிகளைப் பெரிதும் பாதிக்கக் கூடிய வரியல்ல என்பதை நாம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விற்பனை வரி, மேல்வரி பற்றியும் மன்ற உறுப்பினர்கள் கருத்தறிவித்தார்கள். வேறு சில உறுப்பினர்கள் இது சென்னைக்கு மட்டுமிருக்கின்ற காரணத்தால் இதைப் பயன்படுத்திக் கொண்டு சென்னையின் புறநகர்ப் பகுதிகளிலே இருக்கின்றவர்கள் இதை ஏமாற்றித் தப்பித்துக் கொள்ளக் கூடும் என்றெல்லாம் கூறினார்கள். ஆகவே, அதைப் பற்றியும் யோசித்துப் பார்த்தோம். சென்னைக்கு மட்டும்தான் இந்த வரியா ? கோவை, சேலம், மதுரை, திருச்சி போன்ற நகரப் பகுதிகளுக்கு இந்த வரி கிடையாதா என்றெல்லாம் உறுப்பினர்கள் கேட்டார்கள்.

ஆகவே சென்னையினுடைய புறநகர்ப் பகுதிகளுக்கும் கோவை-சேலம்-திருச்சி-மதுரை போன்ற நகரங்களையும்அதன் புறநகர்ப் பகுதிகளையும் இணைத்து இதே விற்பனை வரியை (சர் சார்ஜ்) விதிக்கலாமென்றும் உறுப்பினர்களின் கோரிக்கைகிணங்க 10 சதவீதம் என்றிருக்கும் மேல் வரியை 5 சதவிகிதமாகக் குறைத்து விதிக்கலாமென்றும் கருதுகிறேம்.

### நகரங்களில் நிலவரி.

சென்னை நகரிலும், மற்ற நகரங்களிலும் உள்ள பல்லாயிரக் கணக்கானவர்களில் ஒரு 'கிரவுண்ட்' வரை உள்ளவர்களுக்கு நகர்ப்புற நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மனைவரியின் மூலமாகச் சென்னை நகரிலும் பிற இடங்களிலும் ஒரு 'கிரவுண்ட்' வைத்திருக்கிற பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வரிவிலக்குச் செய்யப்பட்டதன் மூலமாக அதன் மூலம் ஒரு சமதர்ம நோக்கோடு அவர்களெல்லாம் இந்த வரியிலிருந்து விடுபடக் கூடிய சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

வேளாண்மை வரி பற்றி, இந்த மன்றத்தில் நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்டதும் நிருபர்களிடத்திலே கருத்துத் தெரிவிக்கையில் (கம்.) உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், கிராமங்களிலே அதிகமாகச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களை வரிகள் தொடவில்லை என்று சொன்ஞர்கள்.

வேளாண்மை மூலம் அதிக ஆதாயம் பெறக்கூடியவர்களை மட்டுமே பாதிக்கின்ற அளவுக்குச் சில மாறுதல் சம்பந்தப்பட்ட மசோதா இந்த மன்றத்திலே வரவிருக்கின்றது.

இந்த வரிகளை எல்லாம் குறிப்பிட்ட டாக்டர் ஹாண்டே அவர்கள், ஒரு கையால் கொடுத்துவிட்டு இன்ஞெரு கையால் திரும்பி வாங்கிக்கொள்கிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

### மாநிலத்தின் மொத்த வருமானம்.

இந்த மாநிலத்தினுடைய மொத்த வருமானம் 2,400 கோடி ரூபாய். இந்த 2,400 கோடி ரூபாயில் அரசு ஊழியர்கள் ஊதியமாகப் பெறுகின்ற தொகை 100 கோடி ரூபாய். இது இந்த மாநில வருமானத்தில் 24-ல் ஒரு பங்காகும்.

இப்போது கூடுதலாக எழுப்புகின்ற வரிகள் மூலம்—நிதி வாயில்கள் மூலம்—கிடைக்கின்ற தொகை 25 கோடி ரூபாய் என்ருல் அதில் ஒரு பங்கைத்தான்; அதில் ஒரு கோடி ரூபாய்க்கான வரிப் பளுவைத்தான் அரசு ஊழியர்கள் ஈர்க்க வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் அவர்களுக்காக

இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசுப்படி 25 கோடி ரூபாய் ஊதிய உயர்வு தந்திருக்கிறோம். அதனை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" அரியானா பற்றி நான் அறியேனா ?"

தமிழ்நாட்டிலே குறிப்பிட்ட காலத்திற்குள் 72-ம் ஆண்டு முடிவதற்குள்ளாகத் தமிழ் நாட்டிலே எங்கு பார்த்தாலும் மின்னொளி இல்லாத கிராமமே இருக்கக் கூடாது என்று சூளுரைத்து அத் திட்டத்தை நிறைவு படுத்துகிறோம்.




" இதுவரை தமிழ்நாடு முதல் இடம் வகித்து வந்தது. ஆனால் இப்போது அந்த வகையில் இரண்டாவது இடத்திற்கு வந்துவிட்டது. அரியானா முதல் இடத்திற்கு வந்துவிட்டது என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது சொன்னார்கள்.

அது முதல் இடத்தில் இருக்கிறதா என்பதை வடக்கே உள்ளவர்கள்—பத்திரிகைகள்—வெகுவாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இன்னொரு மாநிலத்தின் பிரச்சினைகளில் தலையிடுவது நல்லதல்ல. அந்த சர்ச்சையில் நான் இறங்கவும் இல்லை.

அரியானா முதலிடம் பெற்றது என்றால் அது தமிழ்நாட்டின் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு ; தமிழக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு ! வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்கள் சேர்ந்த தொண்டை மண்டலம்தான் அரியானா !

**மூன்றாண்டுகளிலே மூலைமுடுக்குகளிலெல்லாம் மின் ஒளி.**

நாம் எல்லாக் கிராமங்களுக்கும் உண்மையிலேயே விளக்குப் போடத் தீவிர முயற்சி எடுத்து வருகிறோம். இன்னும் 2, 3 ஆண்டுகளில் ஒளி வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலைக்கு ஏற்பாடுகள் செய்வோம் என்று சூளுரைத்து அதன் காரணமக உங்கள் பாராட்டுதலைப் பெறும் நிலைக்கு ஆளாவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாநிலத் திட்டக் குழு.

இந்த ஆண்டு நம்முடைய மாநிலத்தின் திட்டத்திற்குத் தேவையானதென்று எண்ணுகிற தொகை 100 கோடியிலிருந்து 105 கோடியாகும். மத்திய அரசு இந்த ஆண்டு திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிற தொகை ரூ. 70 கோடியிலிருந்து 80 கோடி வரையில்தான் ஆகும்.

மது விலக்குப் பிரச்சினை பற்றிப் பேசிய நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போலத் திட்டச் செலவைக் குறைத்துக்கொள்வதா? அது இயலாத காரியம்!

## நலம் வாய்ந்த அரசு.




திட்டச் செலவுகள் குறைத்துக் கொள்ளப்படுமானல், இந்த நாட்டில் நாம் ஏழை எளிய மக்களுக்கு அளித்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது ஒரு நலம் வாய்ந்த அரசை நாம் உருவாக்க முடியாது.

மத்திய அரசு 70, 80 கோடி ரூபாய் இந்த ஆண்டுத் திட்டச் செலவிற்காகத் தந்திருந்தாலும் 100 கோடியிலிருந்து 105 கோடி வரையில் நாம் செலவிடுவதென்று அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தத் திட்டங்கள் எங்கிருந்து தீட்டப்பட வேண்டும்? பொதுவாகத் திட்டங்கள் மேலேயிருந்து தீட்டி, அவர்கள் இங்கே அனுப்பி வைத்து, நம்முடைய திட்டங்கள் செயல்படுவது ஒரு சரியான நல்ல சூழ்நிலையை நம்முடைய மாநிலத்தில் உருவாக்குவதற்கு ஏற்புடையதாக இல்லை என்ற காரணத்தால்தான் மாநில அளவில் ஒரு திட்டக் குழுவை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

நான் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை இந்த மன்றத்திலே வைத்த நேரத்தில் அதைப் பற்றி விளக்கியிருக்கிறேன். இப்போது திட்டக் குழு அமைக்கப்பட்டு அது தன் பணியைச் சிறந்த முறையில் ஆற்றத் தொடங்கியிருக்கிறது.

இந்தத் திட்டக் குழு மாநில அளவில் உருவாக்கப்பட்ட நேரத்தில் பத்திரிகைகளில் எல்லாம்—திட்டக் குழு பற்றி ஏதோ மத்தியத் திட்டக் குழுவிற்கு எதிராக மாநிலத்தில் திட்டக் குழு உருவாகிறது என்றெல்லாம் கணிக்கப்பட்டது.

இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் உருவாகியிருக்கிற திட்டக் குழுவைப் போல மற்ற மாநிலங்களிலும் திட்டக் குழு அமைக்க வேண்டுமென்ற முனைப்பு எல்லா மாநிலங்களிலும் ஏற்பட்டிருப்பதைக் காண மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நம் மாநிலத்திற்கெனப் பத்தாண்டுகளில் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றினோம்? பத்தாண்டுகளில் மக்களின் நிலை எவ்வாறு இருக்கும்? கல்வித் தரம் எப்படி இருக்கும்? நம்முடைய பொருளாதார வளங்கள் எப்படி இருக்க வேண்டும்? நம் வளர்ச்சித் துறைகள் எவ்வாறு இருக்க வேண்டும்? இவற்றையெல்லாம் ஆராய்ந்து சரியான முறையில் மாநிலத்திற்கான திட்டத்தை வகுத்துக்கொண்டு, அதற்கான நிதி வாயில்களை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மாநிலத் திட்டக் குழு இன்றையதினம் அமைக்கப்பட்டுத் தன் பணியை ஆற்றத் தொடங்கியிருக்கிறது.

மாநிலத் திட்டக் குழு பற்றி இங்கே பேசப்பட்டது. திட்டக் குழுவின் பணிகள் என்ன என்று வரையறுக்கப்படவில்லை என்று திரு. தங்கமணி அவர்கள் கூறினார்கள். ஏற்கனவே திட்டக் குழுவின் பணிகள் பற்றிய பட்டியல் அறிவிக்கப்பட்டு அது இதழ்களில் வந்துள்ளது. அதை உறுப்பினர்களுக்கும் வழங்கச் செய்வேன்.

### நமது மாநிலத் திட்டக் குழுவைப் பிற மாநிலங்கள் பின்பற்றுகின்றன.

மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்ட நேரத்தில் இதை ஒரு அதிர்ச்சியுடன் மற்ற மாநிலங்கள் பார்த்தன. இன்றைக்கு ஒவ்வொரு மாநிலமும் திட்டக் குழு அமைக்க முன்வருகிற காட்சியைப் பார்க்கிறோம். திட்டக் குழு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் இதை வரவேற்றுப் பேசியிருப்பது ஒரு நல்ல அம்சம் ஆகும்.

நமது திரு. சுப்பிரமணியம் அவர்கள் மத்தியில் அமைச்சராக இருந்தபோதுதான் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் திரு. சி. சுப்பிரமணியத்தைக் குறிப்பிட்டார்களே தவிர, திரு. அசோக் மேத்தாவும் அதற்

குக் காரணம் என்பதைக் குறிப்பிடவில்லை. அவர் இப்போது எங்கிருக்கிறார் என்பது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும், அவர் பக்கத்தில்தான் இருக்கிறார். அது தவிர பெருமதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்தபோதுதான் இந்த நாணய மதிப்புக் குறைப்புச் செய்யப்பட்டது.

இது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது என்பது அல்ல; அப்போதெல்லாம் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குகிற அளவில் இந்த மாமன்றத்தில் இருந்தார்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள். ஆனால் எங்களுடைய 'அதிர்ஷ்டம்' இப்போது மத்திய அரசைக் குற்றம் சாட்டும் அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பூரிப்பு அடைகிறேன்; புளகாங்கிதம் அடைகிறேன்.

## நிர்வாகச் சீர்திருத்தக் குழு.

அதேபோல் நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நாம் எண்ணினோம். நம்முடைய திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கூட, கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

சிறு சிறு அலுவலகங்களில் கூட நிர்வாகம் எந்த அளவுக்கு நடைபெறுகிறது என்று, ஒரேவிஷயத்தைப் பற்றிய 11 கேஸ்களை எடுத்துக் காட்டினார்கள். இங்கே இன்னும் பல விஷயங்களை உள்ளடக்கியதான நிர்வாகச் சீர்திருத்தத்தை நாம் செய்தாக வேண்டும். தமிழ்நாட்டில் இன்றைய நிர்வாகம் போற்றுகிற அளவில் இருந்தாலும் குறைபாடுகள் இல்லாமல் இல்லை.

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் வேலை இந்த நாட்டிலுள்ள பாமர மனிதன் மலிவாகவும், சுலபமாகவும், விரைவாகவும் தனது தேவையின் பலனை அடைய வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தோடு; இந்தக் குழு நிலைமைகளை ஆராய்ந்து, அறிக்கை தரவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

இதையொட்டி நம்முடைய மாநிலம் என்னதான் நிர்வாகத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தாலும், திட்டம் தீட்டினாலும், சமதர்மக் கண்ணோடு பிரச்சினைகளை நோக்கினாலும், அவற்றையெல்லாம் அமலாக்குவதற்கு வேண்டிய, அளவுக்கு அதிகாரத்தைப் பெற்றாக வேண்டுமென்பது இன்றைய ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நெடுநாள் கோரிக்கையாகும்.

## மத்திய மாநில ஆய்வுக் குழு.

அந்த நெடுநாள் கோரிக்கைக்கு ஏற்ப ' ராஜமன்னார் ' குழு அமைக்கப்பட்டு 1969 செப்டம்பர் திங்களில் அந்தக் குழு பணியைத் தொடங்கி அந்த அறிக்கை, மன்றத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய-மாநில உறவுகளைப் பற்றிய ராஜமன்னார் அவர்களுடைய அறிக்கையை அநேகமாக அனைவரும் இங்கே வரவேற்றும் பேசியிருக்கிறார்கள்.

ஹாண்டே அவர்கள் இதிலே ஏதோ பெரிய அபிப்பிராயம் சொல்லப்போவதாகச் சொல்லிவிட்டு, ஏதும் சொல்லவில்லை. ஒருவேளை ' ராஜமன்னார் குழு ' அறிக்கை விவாதத்துக்கு வரும் நேரத்தில் அதைப் பற்றிப் பேசுவார் என்று நான் கருதுகிறேன்.

நாம், மாநிலத்துக்குச் சுயாட்சியும், மாநிலத்துக்கு அதிக அதிகாரங்களும் வேண்டும் என்று கேட்கிற நேரத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி கூட மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருப்பது உள்ளபடியே வரவேற்கத் தக்கது.

திருமதி டி. என். அனந்தநாயகி : என்னவோ இன்றைக்குக் கூடித் தீர்மானம் போட்டோம் என்பது சரியல்ல. 1967-லேயே எங்கள் கட்சித் தலைவர் காமராஜர் அவர்களால் இது கூறப்பட்டிருக்கிறது. பல மாகாணங்களிலும் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அகில இந்திய ரீதியில் இந்தத் தீர்மானம் போடப்பட்டது.

முதல்வர் : அதை யார் சொன்னாலும் சரி, போடப்பட்ட நேரம்தான் முக்கியம். யார் முன்னாலே சொன்னார்கள் என்பதல்ல. ஆனால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெற வேண்டும்.

## மூதறிஞர் ராஜாஜி கருத்து.

மாநில சுயாட்சிபெற வேண்டும் என்கிற கருத்தைப் பற்றி மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 'கல்கி' ஏட்டில் ஒரு கருத்தைக் குறிப்யிட்டிருக்கிறார்.

தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் அதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

## ராஜாஜியும், பன்றிக்கறியும் !

""சார்லஸ் லாம்ப்'' என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் கூறுகிற ஒரு வேடிக்கைக் கதை ! ஆதிகாலத்தில் சீனத்தில் ஒரு வீடு பற்றி எரிந்தபோது அதிலிருந்த ஒரு பன்றியும் வெந்து மாண்டது. அந்தப் பிராணியைத் தொட்டவன் சூடு பொறுக்கமாட்டாமல் விரலை வாயில் வைத்துக் கொண்டான். வெந்த பன்றி மாமிசம் மிகச் சுவையாக இருப்பதாகக் கண்டான். உடனே பக்கத்திலிருந்தவர்கள் தங்களது வீடுகளை எல்லாம் கொளுத்தி, அங்கிருந்த பன்றிகளை வேக வைத்து ருசி பார்த்தார்கள். இப்படியாகத்தானே ஊனைச் சமைத்து உண்ணும் பழக்கம் ஏற்பட்டது. இந்த வேடிக்கைக் கதையை நினைவூட்டும் முறையில் சில முதல் மந்திரிகள் நடந்து கொள்கிறார்கள். அதாவது மத்திய சர்க்காருக்கு எதிராக ராஜ்ய சர்க்கார் அதிகச் சுயாதீன உரிமை பெற வேண்டும் என்ற தங்களது கருத்துக்குக் கிழக்கு வங்கத்தின் கோரிக்கை வலுவூட்டுவதால், பங்களா தேசக் கொந்தளிப்பை இந்த முதன் மந்திரிகள் வரவேற்கிறார்கள்'' என்று அவர் சொல்லியிருக்கிறார்.




பன்றிக் கறியைத் தொட்டுச் சுவைத்துப் பார்ப்பதற்காக வீட்டைக் கொளுத்தியவர்கள் குற்றப் பட்டியலில், நேற்றைய தினம் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியையும் ராஜாஜி அவர்கள் கூற்றுப்படிச் சேர்த்து விட்டிருப்பதற்காக நான் வருந்துகிறேன்.

### பன்றிக் கறியை முதலில் சுவைத்தவர்.

ஆனால் பன்றிக் கறியை முதலில் தொட்டுப்பார்த்து, அது சுவைக்கிறது என்று சொன்னவர் யார் என்று பார்த்தால்—

""சமஷ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க முடியாது என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாகவேண்டும். நாம் வகுத்த இந்திய அரசியலமைப்பு இதைக் கவனத்தில் கொள்ளத் தவறிடவில்லை.

ஆயினும் 1947-க்குப் பிந்திய இந்திய அரசியல் சரித்திரமோ, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் சபலம் எப்படி இடையறாது இயங்கி வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. பிரதேசங்களின் முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைத்து அதிகாரங்களை மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது'' —இதைச் சொன்னவர் ராஜாஜி அவர்கள்.

ஆக, பன்றிக் கறி சுவைக்கிறது என்று முதலில் எடுத்துக் காட்டியவர் மூதறிஞர் ராஜாஜி அவர்கள். '' நமது ஜனநாயகம் '' என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிரதேச ஆட்சியைப் பலவீனப்படுத்தும் போக்கு என்ற தலைப்பில் அந்தப் புத்தகத்தின் 53-ஆம் பக்கத்தில் எழுதியுள்ளதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

### 58-ல் ஆதரிப்பது ; 71-ல் எதிர்ப்பது—வேடிக்கை !

டாக்டர் எச். வி. ஹாண்டே : இதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. மாநிலத்துக்கு அதிக நிதி அதிகாரம் வேண்டுமென்று அப்போது ராஜாஜி கேட்டார். ஆனால் எதற்கெடுத்தாலும் மத்திய அரசோடு போரிடுவதைத்தான் ராஜாஜி எதிர்க்கிறார். இது மற்ற மாநிலங்களுக்குப் பரவினால் அது நல்லதல்ல.

முதல்வர் : இந்தப் புத்தகம் 58-ல் வெளியிடப்பட்டது. 58-லேயே காலம் பக்குவமாகக் கனிந்திருக்கிறது. ஆனால் 71-ல் காலம் பக்குவப்படவில்லை என்பது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

நாங்களும் மத்திய அரசு பலவீனப்பட்டு விட வேண்டும் என்று சொல்லவில்லை. அவர் எங்களை விட ஒரு படி மேலாகச் சென்று கிழக்குப் பாகிஸ்தானுடைய விடுதலைப் போரை ஆதரித்துப் பாகிஸ்தானிலிருந்து விடுபட்டுத் துண்டாகப் பிரியவேண்டும் என்பதைக்கூட ஆதரித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இங்கே நாம் கேட்கும் மாநில சுயாட்சி, அதிகார அளவில் அல்லாமல், தனியாகத் துண்டித்துக் கொண்டு போக வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லை என்பதை நினைவுபடுத்துகிறேன். மத்திய அரசுடன் நமக்கு இருக்கும் உறவுகள், நட்புகளில் நமக்கு ஏற்படும் சங்கடங்களை அதன் அடிப்படையில் இடைக்கால வரவு செலவுத் திட்ட

தில் விளக்கமாகக் கூறி அது பற்றி எழுந்த ஐயப்பாடுகளுக் கெல்லாம் நான் அந்த நேரத்திலே மிக விளக்கமான பதில் கூறியிருக்கிறேன். ஆகவே அதைப்பற்றி மீண்டும் ஒரு முறை விரிவாகச் சொல்வது அவசியமில்லை என்று கருது கிறேன்.

## போராடிப் பெற்றவை.

மத்திய அரசோடு நாம் போராடவேயில்லை ; போராடி எதையும் பெறவேயில்லை என்று யாரும் கூறிவிட முடியாது. இன்றைக்குக் கூட ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை நான் சொல்ல முடியும்.

மத்திய அரசுடைய அனுமதி பெற்று, மத்திய அரசு உதவியுடன் திருத்துறைப்பூண்டி, குத்தாலம், பூதலூர், லால் குடி, காட்டுமன்னார்கோயில், பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் வேளாண்மை விற்பனைக் கூடம் அமைக்கவும், அவற்றோடு இணைந்து 56 கிராமச் சாலைகள் ஏற்படுத்தவும், ஒருங்கிணைந்த திட்டத்தைத் தொடங்க ஒன்றரைக் கோடி ரூபாயை மத்திய அரசு இரண்டு நாள் முன்பு நமக்கு அனு மதித்திருப்பதை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே, நாம், தேவைப்படும் நேரத்தில் எல்லாம், பின் வாங்காமல் மத்திய அரசோடு வாதாடிப் போராடி நம் முடைய மாநிலத்துக்கு உரியவைகளைப் பெறுவதிலே என் றைக்கும் சளைத்துவிடவில்லை.

## சுதந்திராக் கட்சியின் உண்மைத் தோற்றம்;


ஆனால், எதற்கெடுத்தாலும் " மாநில சுயாட்சி மாநில சுயாட்சி " என்று அதையே சொல்லி நீங்கள் மக்க ளிடத்திலிருந்து தப்பித்துக் கொள்கிறீர்கள்—கல்லூரி அனுமதியா, மருத்துவச்சாலை அனுமதியா, மருத்துவச் சாலைக்கு 2—3 புதிய படுக்கைகள் வேண்டுமா—இந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் கூட நீங்கள் மாநில சுயாட்சி யைக் காட்டித் தப்பித்துக் கொள்கிறீர்கள்" என்ற குற்றச் சாட்டை டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னார்.

ஒருவேளை அவர்கள், மாநில சுயாட்சியை வரவேற்கக் கூடும். ஆனால் அதே நேரத்தில் எதற்கெடுத்தாலும் மாநில சுயாட்சியைக் காட்டுகிறோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டவும் கூடும்.

ராஜமன்னார் குழு ' அறிக்கை மீது பேசுகிற நேரத்தில் தான் மத்திய மாநில அரசு உறவு பற்றிச் சுதந்திராக் கட்சியின் உண்மைத் தோற்றத்தை டாக்டர் ஹாண்டே மூலம் நாம் பார்க்க முடியும்.

டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ராஜமன்னார் அறிக்கையை இங்கு எடுத்துக் கொடுத்தவர் திரு. பொன்னப்ப நாடார். அவர் எடுத்துக் கொடுத்து உதவி புரிந்தார். அவர் ராஜமன்னார் குழு அறிக்கை மீது பின்னல் பேசுகிறேன் என்று பீடிகை போட்டார். இன்று பிரமாதமான விமரிசனம் கேட்கலாம் என்று நினைத்து வந்த எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

வால் மாத்திரம் பாக்கி !




ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் சுவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். சுவரில் ஒரு சிறிய வளை. அதில் ஓர் எலி நுழைந்து கொண்டிருந்தது. ஆசிரியர் ' நான் சொன்னதெல்லாம் நுழைந்ததா ? ' என்று கேட்டார். ' வால் மாத்திரம் பாக்கி ' என்று அவன் சொன்னான்.

அதைப்போல் ராஜமன்னார் அறிக்கையிலே அவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, முதல் பக்கத்திலே வெளியிடப்பட்டுள்ள முதலமைச்சருடைய படத்தை மாத்திரம் காட்டி, " இது தேவைதானா ? ' பர்சனலிட்டி கல்ட் ' வளருகிறது ! " என்று குற்றம் சாட்டி, இது ஏதோ ஆளும் கட்சியில் உள்ளவர்களே கூட அந்த உணர்ச்சியில் இருக்கிறார்கள் என்பதைப் போல் எல்லாம், இங்கேயும் ஏதாவது நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் பேசினார்கள்.

' பர்சனலிடி கல்ட் ' தி. மு. க. வில் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை ' பர்சனலிட்டி கல்ட் ' இல்லை. நாங்கள் ஒருவருக்கொருவர், இவரை விட அவர் பெரியவர், அவரைவிட இவர் பெரியவர் என்று பார்க்கும் உணர்ச்சியை வளர்த்துக்கொண்டது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்திலே

இருக்கிற தலைவனிலேயிருந்து தொண்டர்கள் வரை நாங்கள் ஒரே குடும்பம் என்று எண்ணி, அண்ணன்-தம்பிகளாகப் பழகி வருகிறவர்கள். ஆகவே இங்கே தனியார் தோத்திரம், தனியார் துதி என்பதற்கெல்லாம் எள்ளளவும் இடமில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் என்னுடைய அருமை நண்பர் வீராசாமி அவர்கள் மிகுந்த சிரமப்பட்டுப் புத்தகங் களைக் கொண்டு வந்து காட்டி, அதிலே காமராஜர் படம் இல்லையா ? நேரு படம் இல்லையா ? என்று கேட்டார்கள்.

டாக்டர் ஹாண்டே விரும்பியது அது அல்ல.

டாக்டர் ஹாண்டே பேசும்போது இப்படிச் சொன்னார் நேரு, காமராசர் படம் போடப்பட்டது; அதையும்தான் எதிர்த்திருக்கிறோம் ; ஆகவே எதிர்க்கிறோம் என்று குறிப் பிட்டிருக்கிறார். எனவே அவர் விரும்புகிற படத்தைக்காட்ட விரும்புகிறேன்.

முதலமைச்சராக இருந்தபோது ... ... ... ...

" மெட்ராஸ் இன்ஃபர்மேஷன் " என்ற நமது சர்க்கார் பத்திரிகையில், 1952-ஆம் ஆண்டு ராஜாஜி அவர்கள் முத லமைச்சராக இருந்தபோது வெளிவந்த படம் இது. பர்சனலிடி கல்டா ? இல்லையா ? எளியேனுக்குத் தெரியாது.

(அவையில் மேற்படி படத்தை எடுத்துக்காட்டினார் முதல்வர்).

அது மாத்திரம் இல்லை. புதியதாக மாநில கவர்னர் வருகிறார் ; அந்த நேரத்தில் கவர்னர் படத்தை முதலில் போட்டுவிட்டு அடுத்துப் போடப்பட்ட படம் ராஜாஜியின் படம்தான். இது ' பர்சனலிடி கல்டா ' இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

கலைமகள், கல்கி போன்ற பத்திரிகைகளில், அதிலும் முக்கியமாக அவருக்குத் தொடர்புடைய ' கல்கி' யில் அவர் கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றுக் கொண்ட போது " அரியாசனத்தில் ஜனக மகாராஜர் ", " ஜனக ராஜரிஷி " என்பதாக எல்லாம் வருணிக்கப்பட்டது.

ராஜாஜியைக் கடவுளாக்கிய கதை !

அதுமாத்திரம் அல்ல. 1952-ஆம் ஆண்டு இந்த மன்றத் திலே ஒரு நம்பிக்கைத் தீர்மானம் ராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்டபோது, நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது எதிர்த்தரப்பில் இருந்து திரு. அந்தோணிப்பிள்ளை பேசிய பேச்சை எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்:—

" இந்தத் தீர்மானத்தின் நோக்கம் என்ன? இந்த அமைச்சரவை, இதற்கு முன்பிருந்த அமைச்சரவைகளைப் போல் சாமானியர்களை—மதிப்பு ஏதுமற்றவர்களைக் கொண்ட தல்ல; இந்த அமைச்சரவை அற்புதமானது, தலைசிறந்த ராஜ தந்திரியின் தலைமையில் இயங்குவது என்பதை நிரூபிப்பது தான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம்.

இப்போது காங்கிரசின் போக்கு என்னவென்றால், ஒரு தலைமை வழிபாட்டைத் துவக்குவதுதான். கடந்த தேர்தலி லும் இதைக் கண்டோம். காங்கிரஸ் ஐந்தாண்டுத் திட்டத் தின் மீதா ஓட்டுக் கேட்டது? கழுதையானாலும் குதிரை யானாலும் காங்கிரஸ் வேட்பாளருக்குப் போடும் ஓட்டு—பெரும் தலைவரான நேருவிற்குப் போடும் ஓட்டு என்று கூறப் பட்டது. ஆனால் இந்தத் தலைமை வழிபாட்டுத் தத்துவம் தென்னாட்டில் எடுபடவில்லை. ஆகவே, ஒரு தென்னாட்டு ரட்சகரைத் தேட வேண்டிய அவசியம் காங்கிரசுக்கு ஏற்பட் டது. இந்தப் புதிய பூஜா முறையை ராஜாஜியே வளர்த்து விட்டார். தான் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி—கடவுளின் முழு அதிகாரம் பெற்ற தூதுவர் என்றே தம்மைப் பற்றி ராஜாஜி கூறிக்கொண்டார்.

## " நானே கடவுள்."

இன்னும் சிறிது காலம் கழித்தால் ராஜாஜி 'நானே கடவுள்' என்று கூறிக்கொண்டால் கூட நான் வியப்படைய மாட்டேன். மழைக்காகப் பிரார்த்தியுங்கள் என்று ராஜாஜி கூறி—மழையும் பெய்து விடவே—சில காங்கிரசார் ராஜாஜி யால்தான் மழை பெய்தது. ஆகவே அவர் கடவுள் என்றுகூடக் கூறத் துவங்கி விட்டனர்.

•

## செயற்கை மழைக்கு ஆராய்ச்சி ஏன்?

இது உண்மையானால், செயற்கை மழை வரவழைக்க, ஆராய்ச்சி நடத்த, மக்கள் பணத்தைச் செலவு செய்யாதீர் என்று மத்திய அரசுக்கு விசேடத் தீர்மானம் நிறைவேற்ற லாம். எங்கேனும் வறட்சித் துயர் ஏற்பட்டிருந்தால், அங்கே ராஜாஜியை முதலமைச்சராக அனுப்பினால் போதும்" என்பதாகத் திரு அந்தோணிப் பிள்ளை அவர்களால் 'பர்சன விடி கல்' கூட அல்ல, கடவுளாகவே ராஜாஜி தன்னை ஆக்கிக்கொண்டிருக்கிறார் என்று குற்றம் சாட்டப்படுகிற நிலைமையில் அன்றைக்கு ராஜாஜி வளர்க்கப்பட்டார்.

செய்தி ஏடுகள் முதல் சினிமாப் படம்வரை.

அது மாத்திரம் அல்ல—ஏ.வி.எம். தயாரித்த சினிமாப் படத்தில் ராஜாஜி ஏர் உழுவது போலக் காண்பிக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக ஏர் உழுது களைத்துப் போனவர் அல்லவா ?

அது மாத்திரம் அல்ல, பல ஆங்கில ஏடுகளில் இன்னும் பூணூலைக் காதிலே மாட்டிக்கொண்டு அவரே துண்டு துவைப்பது போல் படம் போட்டுக் காட்டப்பட்டது.

சுதந்திராக் கட்சியில் ராஜாஜிக்குப் பிறகு யார் ?

'பர்சனலிடி கல்ட்' என்ற அந்தக் குற்றத்தை எங்கள் மீதும் எங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதும் சுமத்திய நேரத்தில் நான் எண்ணிக்கொண்டேன். ராஜாஜி உயிரோடு இருக்கும் போதுதான் 'ராஜாஜி ஹால்' என்று பெயரிடப்பட்டது. ராஜாஜி உயிரோடு இருக்கும்போதுதான் இந்த மாமன்றத்தில் அவரது பெரிய படம் திறந்து வைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சுதந்திராக் கட்சியினரைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், ராஜாஜி இல்லாவிட்டால் அதற்குப் பிறகு யார் ! அது 'பர்சனலிடி கல்ட்' அல்லவா? அந்த முறையில் 'பர்சனலிடி கல்'டை வளர்த்துவிட்டார்கள். ஆனல், திராவிட முன்னேற்றக் கழகத்தில் கருணாநிதி இல்லாவிட்டால், அதைஅடுத்துப் பலபேர்இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் ஹாண்டே : முதலமைச்சரே தனி நபர் துதியை ஊக்கப்படுத்துகிறார் என்பதே எனது குற்றச்சாட்டு. முன்பு இந்த அவையில் சீமைச்சாமி பேசும்போது தலையா, வாலா என்று முதல்வர் கேட்டார். இந்த மனப்பான்மை மாறி ஜனநாயகவாதியாக ஆகவேண்டும் என்று சொன்னேன்.

முதல்வர் : ஜனநாயகம் உங்களிடம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பின்னல் பேசுகின்ற நேரத்தில் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

## பிரதமர் இந்திரா காந்தியின் கடிதம்.

'ராஜமன்னார் குழு' அறிக்கை டில்லி போய்ச் சேர்ந்ததாகக் கூடத் தெரியவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ராஜமன்னார் அறிக்கை அங்கே போய்ச் சேர்ந்து, 22-ஆம் தேதி அன்று பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய கடிதத்தை இங்கே படிக்கிறேன்.

New Delhi,
22nd June 1971.

Dear Thiru Karunanidhi,

I have received your letter of the 15th June with which you have sent me a copy of the Centre State Relations Enquiry Committee. Your Government will probably examine the recommendations of this Report. As you know, the Administrative Reforms Commission also went into this question and has already submitted a report, which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issues and we intend to consult all the Chief Ministers.

With regards,

Yours sincerely,
(Sd.) INDIRA GANDHI.

பிரதமர் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு :—

புது டில்லி,
ஜூன் 22, 1971.

அன்புள்ள திரு. கருணாநிதி அவர்களுக்கு :

தாங்கள் ஜூன் 15-ஆம் தேதியிட்டு எழுதிய கடிதமும் அதனுடன் அனுப்பிய மைய-மாநில உறவுஆய்வுக் குழு அறிக்கையின் பிரதியும் கிடைக்கப் பெற்றேன். உங்கள் அரசு இந்தப் பரிந்துரைகளைப் பரிசிலனை செய்யும் என்று நினைக்கிறேன். இது குறித்து நிர்வாகச் சீர்திருத்தக் குழுவும் ஏற்கனவே ஆராய்ந்து அறிக்கையினை அளித்திருக்கிறது. மேற்படி அறிக்கையை நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

இந்தப் பிரச்சினையில் தங்களுடைய அரசின் கருத்துக்களை எங்களுக்கு அனுப்பினால் அவற்றையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

இது முக்கியமான பிரச்சினை ஆகும். இதுபற்றி எல்லா முதல்வர்களையும் கலந்து பேசுவதாக இருக்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

இந்திரா காந்தி.

என்பதாக இந்திய முதல் அமைச்சருடைய கடிதத்தில் கூட இது பற்றிப் பரிசீலிப்பதற்கு இந்தியத் தலைமை அரசு தயாராக இருப்பதற்கு அறிகுறி காணப்படுவதைக் குறித்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

காலம் தாழ்த்திக் கடிதத்தை வெளியிடக் காரணம்.

22-ஆம் தேதி வந்த கடிதத்தை இதுவரையில் வெளியிடாமல் நேற்றையதினம் வெளியிட்டதற்குக் காரணம், 28-ஆம் தேதி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் இருக்கிறதே என்பதற்காகத்தான். முதலில் வெளியிட்டால் ஒருவேளை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், இப்படி முதலமைச்சர்களை எல்லாம் கூட்டிப் பிரதமர் பேசுவதா? அப்படியானால் மத்திய அரசு வலுவிழந்து விடாதா? என்ற அளவில் தீர்மானம் வந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக வெளியிடாமல் இருந்தேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வாதத் திறமை மிக்கவர். ஆகவே தான் தீர்மானத்தையும் இந்திரா காந்தியின் கடிதத்தையும் ஒன்றாகச் சொல்லித் தீர்மானத்திற்குப் பிறகு கடிதம் வந்ததாக இருக்கட்டும் என்று பேசினார்கள். அதை நான் புரிந்துகொண்ட காரணத்தால்தான் கடிதம் வந்த விவரத்தை இங்கே தெரிவித்தேன்.




நம்முடைய மத்திய அரசோடு மாநில அரசுக்கிருக்கின்ற உறவுகள் எந்தெந்த வகையிலிருக்க வேண்டும். அதிகாரங்கள் எப்படியெல்லாம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று

கூறியுள்ள ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கை, பேரவையிலும், மேலவையிலும் மிக விரைவில் விவாதிக்கப்படும் சமயத்தில் உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை வழங்கவிருக்கின்ற காரணத்தால், நான் அதைப் பற்றி இப்பொழுது விரிவாகப் பேச விரும்பவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் கூறுகின்ற மாநில சுயாட்சிக் கொள்கையை இன்றையதினம் எதிர்க்கின்ற சில பெரியவர்கள் கூட, ஒரு காலத்தில் சுயாட்சி தேவை என்பதற்கு அவர்கள் பல்வேறு கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் சுவாமிநாதன் அவர்கள் இங்கே பேசுகின்ற போது மாநில அரசு அதிகாரங்கள் அதிகமாகப் பெற வேண்டுமென்ற கொள்கைக்கு ஆதரவாகப் பேசியது வரவேற்கத் தக்க கருத்தாக இருந்தது. ஆனால் அவருடைய கட்சிக்குள்ளே இது விஷயத்தில் ஒருமித்த கருத்து இருக்கிறதா என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை.

பெரியவர் கே. சந்தானம் அவர்கள் '' சுயராஜ்யா '' பத்திரிகையில்' ராஜமன்னார் குழு' வினுடைய அறிக்கையைப் பற்றி ஆதரித்துக் கட்டுரை எழுதியிருக்கிறார். அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்திக் கூறி வருகின்ற மாநில சுயாட்சிக்கொள்கைக்கு மூதறிஞர் ராஜாஜி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

இவை இரண்டும் ஒரேபத்திரிகையில் வருகின்ற காட்சியை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் நண்பர் சுவாமிநாதன் மாநில சுயாட்சிக் கொள்கையை ஆதரித்தும் பேசியிருக்கிறார்.

### ராஜாஜிக்குப் பதில் சொல்ல.

ஒருவேளை ராஜாஜி அவர்கள் பார்த்துவிட்டு ஏன் இப்படிப் பேசியிருக்கிறாய் என்று கேட்டால், பதில் சொல்ல, ராஜாஜி அவர்கள் எழுதிய புத்தகமே இருக்கிறதென்று நண்பர் சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ' நமது ஜனநாயகம் ' என்ற புத்தகம், அதிலே சொல்லியிருக்கிறார்.

' இந்திய தேசிய வாழ்விலும், பண்பாட்டிலும் குடிகொண்டுள்ள பிரிவினைப் போக்குக் காரணமாக, சம அந்தஸ்துள்ள சுயாட்சி உறுப்புகள் அடங்கிய சமஷ்டி யூனியனை உருவாக்கவே நாம் உழைக்க வேண்டும். பிரிவினைப் பாடுகளில்லாத நாடு இந்தியா என்ற கருத்தினுலெழும் தேச பக்தி வேறு. எனவே சமஷ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க

முடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.'' நேற்று நான் சட்டமன்றத்தில் பேசி, எடுத்துக் காட்டிப் பேசி யது ஒரு பகுதி. இன்றையதினம் படித்துக் காட்டுவது ராஜாஜி அவர்கள் சுயாட்சிக்காகவே பாடுபட்டிருக்கிருர் என்பதற்காகத்தான் எடுத்துக் காட்டுகிறேன். இதற்கு ராஜாஜி அவர்கள் சமாதானம் சொல்லலாம். அன்று சொன்னதை இன்று மாற்றிக்கொள்ள எனக்கு உரிமையுண்டு என்று சொல்லலாம். அவருடைய முன்னுரையில் அவர் எழுதியிருப்பதை இங்கே எடுத்து வைக்கிறேன்.

'இதிலடங்கிய பிரச்சினைகள் பற்றி நான் சொல்லியிருப்பவை யாவும் எள்ளளவும் பட்சபாதமின்றித் தீர்க்க சிந்தனையின் பயனாக அடையப் பெற்ற முடிவுகள் என்பதை வாசகர்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.'

இது அவர்கள் முன்னுரையில் வெளியிட்டுள்ள கருத்து! 'நமது ஜனநாயகம்' என்ற புத்தகத்திலிருக்கிறது. ஒருவேளை நண்பர் சாமிநாதனைக் கேள்வி கேட்டால் இது நல்ல ஆயுதமாகவிருக்கும் என்பதற்காக இந்தப் புத்தகத்தின் தலைப்பையும் எடுத்துச் சொன்னேன்.

மத்திய அரசு, மாநில அரசுகளுடைய எல்லா விவகாரங்களிலும் இன்றைய தினம் தலையிட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் தலையிட வேண்டிய விவகாரங்களில் தலையிடுவதில்லை. அதைத்தான் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வெகு வேகமாக எடுத்துச் சொன்னார்கள்.

### மத்திய அரசு காலதாமதம் செய்வது ஏன்?

காவிரி நதிநீர்ப் பிரச்சினை, மத்திய அரசு என்றைக்கோ தலையிட்டுத் தீர்த்திருக்க வேண்டிய பிரச்சினை. 1968-ஆம் ஆண்டிலிருந்து இந்நாள் வரையில் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும், தீர்ந்து விடும் என்று சொல்லி, கேரள முதலமைச்சரும், மைசூர் முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் கூடிக் கூடிப் பேசுகின்ற காட்சிகள் தமிழ் நாட்டிலும், அதைப் போலவே டெல்லியிலும், மைசூரிலும் நடந்து நடந்து; கடைசியாகப் பேச்சு வார்த்தை முறிந்து விட்டது என்று பேச்சு வார்த்தைக்கு முன்னிலை வகித்த மத்திய அரசு அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்களே ஒத்துக் கொண்டு, பேச்சுவார்த்தை முறிந்து விட்டது, இனித் தொடரக் காரணமில்லை என்று கண்டு கொண்ட காரணத்தினால், இதை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று அவர் சொன்னார். சொன்ன பிறகும் கிட்டத்தட்ட ஓராண்டுக் காலமாகியும் நாள் கடத்தி வருகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது போல், மைசூரில் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், நாடாளுமன்றத் திற்குப் பொதுத் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், அதற்காக அப்பொழுது அங்கே சென்ற பிரதமர் இந்திரா காந்தி, நடுவர் தீர்ப்புக்கு இப்பிரச்சினையை விட்டு விடுவதென்று தைரியமாகச் சொன்னார்கள். இப்பொழுது இடையில் ஏன் குறுக்கிட்டு, அவர்கள் நடுவர் தீர்ப்புக்கு அதை விடு வதற்குத் தயங்குகிறார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

நாங்கள் ஒரு காலத்தில் திராவிட நாடு திராவிடருக்கே யாக வேண்டும் என்ற பிரிவினையைக் கேட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால் நாட்டினுடைய பாதுகாப்பு, சூழ் நிலை இவைகளையெல்லாம் உணர்ந்து அந்தப் பிரிவினைக் கொள் கையையே கைவிட்டு விட்டவர்கள் நாங்கள். இன்றைய தினம் நாங்கள் இந்த அரசுப் பொறுப்பிலிருக்கிறோம். அதிகாரங்கள் எங்களுக்கு அதிகமாகத் தேவை என்று கேட் கிறோம். கேட்கின்ற உரிமை எங்களுக்குண்டு. ஆனால் அந்த அதிகாரங்களைப் பெறுகின்ற வரையில் அந்த அதி காரங்களுக்குட்பட்டு நடக்கின்ற அடக்க உணர்ச்சியை இந்த அரசு பெற்றிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியும். வீராணம் திட்டத்திற்கு அண்ணா அவர்கள் காலத்தில் கால்கோள் விழா நடத்தினோம். ஆனால் அந்தத் திட்டத் திற்கு அனுமதி கொடுக்கக் கிட்டத்தட்ட $1\frac{1}{4}$ ஆண்டுக் காலமாகியது. அனுமதி கிடைக்கிறதோ இல்லையோ, எப் படியிருந்தாலும் தொடங்கலாமென்று நாங்கள் தொடங்கிட வில்லை. ஆனால் இன்றையதினம் மத்திய அரசு, மைசூரில் என்ன நடக்கிறதென்பதை ஏன் மறந்து விட்டதென்று நான் கேட்க விரும்புகிறேன்.

வீராணமாவது கொஞ்சம் பெரிய விஷயம். நான் உங்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இது சின்ன விஷயம். நம்முடைய கோட்டையைச் சுற்றி, கோட்டை மதகில், ஏராளமாகப் புல் பூண்டுகள் கிளம்பி யிருந்தன. நம்முடைய அதிகாரிகளை வரவழைத்து அந்தப் புல்பூண்டுகளைச் செதுக்கி, அழகான செடிகளை வைக்கக் கூடாதா? வண்ண மலர்களை வளர்க்கக்கூடாதா ?' என்று கேட்டேன். அதிகாரிகள் தலையைச் சொறிந்துகொண்டு உரைத்தார்கள் :- ' இந்தக் கோட்டை மத்திய அரசின் ராணுவத்திற்குச் சொந்தம். இந்தப் புல்பூண்டுகளைச் செதுக்க அவர்களிட மிருந்து அனுமதி பெற்றாகவேண்டு ''மென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு சென்னைக்கு வந்திருந்த அன்றையப் பாது காப்புத் துறையினுடைய உதவி அமைச்சர் திரு. கிருஷ்ணா அவர்களை நானே நேரில் அழைத்து வந்து கோட்டையைச் சுற்றிக்காட்டிக் கோட்டையின் முகப்புப் பக்கத்தில் முளைத் துக்கிடக்கும் புல் பூண்டுகளைச் செதுக்கிவிட்டு அங்கே நல்ல செடிகளை வளர்ப்பதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள்

என்று கேட்டேன். அனுமதி வழங்குகிறேன் என்று சொல்லி விட்டுப்போனார். அதற்கு ஒரு கடிதம் எழுதிவிட்டுப் பிறகு இரண்டொரு நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிய பிறகு சென்னைக்கு வந்திருந்தபோது மீண்டும் ஞாபகப் படுத்திய பிறகு, மத்திய சர்க்காரிடமிருந்து அனுமதி கிடைத்துப் புல் பூண்டுகள் செதுக்கப்பட்டு நல்ல செடிகள் வளர்க்கப்படுகின்றன. அந்தக் காட்சியினை நீங்கள் நாள்தோறும் பார்க்கிறீர்கள். கோட்டையைச் சுற்றியிருக்கிற புல் பூண்டுகளைச் செதுக்க மத்திய சர்க்காருடைய அனுமதியை நாங்கள் நாடினோம். ஆனாலும் எங்களுக்கென்று அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டு அடக்கத்தோடு நாங்களிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு மைசூரின் போக்கை ஏன் கண்காணிக்கவில்லை ? திட்டக்குழுவினுடைய ஒப்புதலைப் பெறாமல் இன்றைய தினம் அங்கே அணைகளைக் கட்டிக் கொண்டே போகிறார்கள்.

## திரைப்படத்துக்கு அனுமதி மறுப்பு.

ஹேமாவதி, கபினி, ஹரங்கி போன்ற அணைகள் அங்கே கட்டப்படுகின்றன. அதிலே இன்னொரு வேடிக்கை. அதைப் பற்றிப் பேச அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கோட்டையில் நம்முடைய அமைச்சர்கள் அறையில் கூட்டப்பட்டது. அதை அரசு செய்திப்படமாக எடுத்தார்கள். அந்தச் செய்திப் படம் வெளியிடப்படுவதற்காகத் தணிக்கைக் குழுவிற்குச் சென்றது. தணிக்கைக் குழு அந்தச் செய்திப் படத்தை அனுமதிக்க மறுத்து விட்டது. என்ன காரணம் தெரியுமா ? காவிரி நதி நீர் தகராறில் '' மத்திய அரசு காலதாமதம் செய்வது குறித்து '' ஆராய்வதற்காக அனைத்துக் கட்சித்தலைவர்களுடைய கூட்டமென்று படத்தில் காட்டப்பட்டது. அதற்குப் பின்னால் ஒரு வரி. அந்த வார்த்தை கூடாதென்று சென்சார் போர்டார் நிராகரித்து விட்டார்கள். அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. இங்கேயிருந்து டெல்லியிலிருக்கின்ற தலைமை அதிகாரிக்கு உடனடியாக அந்தப் படத்தை அனுப்பி அங்கே அப்பீல் செய்தோம். ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் அவரும் தாழ்ப்பாள் என்று மத்திய சர்க்கார் காலதாமதம் செய்து வருகிறது என்பதை எடுத்துவிடவேண்டும் என்றார். மத்திய சர்க்கார் காலதாமதம் செய்கின்றது என்ற வார்த்தைகள் இருக்கக் கூடாதென்று வெளியிட அனுமதி மறுத்து விட்டார்கள்.

பிறகு அனைத்துக் கட்சிக் கூட்டம் தமிழ்நாடு பூராவும் நடந்தது. சென்னையிலும் நடந்தது. நானும் மற்ற கட்சித் தலைவர்களும் சென்னையில் கலந்துகொண்டோம். அதுவும் செய்திப் படமாகப்பட்டு சென்சார் போர்டுக்குச் சென்றிருக்கிறது. அதையும் மறுத்து விட்டார்கள்.

இன்றைய தினம் அந்த அளவுக்கு சென்சார் போர்டி னுடைய அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசு தாமதம் செய்கின்றதென்று சொல்லக் கூடாதாம்.

ஆனல் ஒரு திரைப் படத்தில் இந்திரா காந்தியைப் போலவே வேடம் போட்டு அந்த அம்மையாரைக் கிண்டல் செய்வதுபோல் படமெடுக்கலாமாம்? அதை இங்கேயிருக் கின்ற சென்சார் போர்டு பார்க்கின்ற போது தணிக்கை செய்தார்களா?

நம்மால் திருப்பிச் செய்ய முடியாதா?

ஆனல், இன்றைக்கு மத்திய அரசு காலதாமதம் செய்கின்றது என்ற வார்த்தையை அனுமதிக்கவில்லை. ஆக, அவர்கள் அவைகளைப் பற்றிக் கூடக் கவலைப்படவில்லை மத்திய அரசின் அதிகார பீடம் இருக்கிறதே, அதற்கு ஒரு சிறு மாசும் யாரும் கற்பிக்கக் கூடாது என்று கருதுகிருர்கள். அதிலே வெட்கப்படுகிறவர்கள், காலதாமதம் செய்யாம லிருக்கட்டுமே! காலதாமதமாவதைத் தவிர்க்கட்டுமே!

இவர்கள் ஹேமாவதியில், கபினியில், ஹரங்கியில், பேரணைகள் கட்டும் திட்டத்தைத் தடுக்க முற்படாவிட் டால், நாளைக்குத் தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்தில் ராஜ ராஜசோழன் சிலையை வைக்கக் கூடாது என்று சொல்கிருர் களே, அதே இடத்தில் நாம் இராஜராஜ சோழனுடைய சிலையை வைக்க முடியாது என்று கருதுகின்ருர்களா?

அவர்களுடைய பொறுப்பிலிருக்கிற தீவுத் திடலில், அவர்கள் அனுமதி பெருமலேயே அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்க முடியாது என்று கருதுகின்ருர் களா? அப்படி அறிவித்துக் கூட்டம் நடத்தினல், நமது போலீசாரை மத்திய அரசின் போலீசார் வந்து விரட்டிவிடு வார்களா? எனக்குப் புரியவில்லை.

இங்கும் 'இருண்டு' போகவேண்டுமா?

நாம் பண்போடு நடந்து கொள்கிருேம். அடக்கத் தோடு நடந்துகொள்கிருேம். அமைதியுடன் நடந்துகொள் கிருேம். பொறுப்போடு நடந்துகொள்கிருேம்! அவை களை எல்லாம் இழந்து விட்டு, மைசூரைப் போல நடந்து கொள்வதற்கு இங்கேயும் தயாராக இருக்கிருர்கள் என்பதைத் தான் மத்திய அரசுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு நினைவில்லை. அது அஸ்ஸாமோ அல்லது மேற்கு வங்கமோ என்று—இரண்டிலொன்று என்று கருதுகிறேன்

அவர்களுடைய கோரிக்கை நிறைவேருத காரணத்தால் ஓராண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி சுதந்திர நாளினைக் கொண்டாட முடியாது என்று அறிவித்தார்கள்.

அதேபோல, இன்றைய தினம், மைசூரில் எடுக்கப்படுகின்ற கபினி அணையால், ஹாரங்கி அணையால், காவிரி வறண்டு போய், தமிழகம் பத்தாண்டுக் காலத்திற்குள் வறண்டு விடுமானுல், அப்படி இருண்டுபோகின்ற தமிழகத்தை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்பதைக் காட்டுவதற்காக இந்த ஆண்டு சுதந்திர நாள் இருண்டு போய் விடட்டும் என்று கூறுவதற்கு நம்மாலும் முடியும் !

இவைகளெல்லாம் ஏற்படாதவாறு மத்திய அரசு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் நான் நம்புகிறேன் மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் வருமென்று.

8-ஆம் தேதியன்று பேரவையிலும், 9-ஆம் தேதியன்று மேலவையிலும் காவிரி நதி நீர்த் திட்டம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்பு சாதகமான பதில் அங்கேயிருந்து கிடைக்குமென்று நான் கருதுகிறேன். நான் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இதைப் பற்றியெல்லாம் 7-ஆம் தேதி எல்லாக் கட்சித் தலைவர்களோடும் கலந்து அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவிருக்கிறேன்.

## மதுவிலக்குக் கொள்கை.

அடுத்தபடியாக இந்த மாமன்றத்தில் பேசப்பட்ட முக்கியமானது மதுவிலக்குக் கொள்கை பற்றியது. மதுவிலக்குக் கொள்கை இங்கே இருக்கிற நம்மால் மாத்திரம் அல்ல—உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலும்—பல்வேறு நாட்டு மக்களாலும், பல்வேறு நாட்டு அரசுகளாலும் சட்டபூர்வமாக அமல்படுத்தத் திட்டமிட்டுத் தோற்றுப்போய் இருக்கிறது. இதை வரலாற்றுச் சான்றுகள் நிறையக் காட்டுகின்றன.

## மற்ற நாடுகளில் மதுவிலக்கு.

அமெரிக்க நாட்டில் 1919-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16-ஆம் நாள் அரசியல் சட்டத்தையே திருத்தி மதுவிலக்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தார்கள். பதினுன்கு ஆண்டு காலம் அமல்படுத்தப்பட்டதில் கடைசியாகக் குற்றங்கள் அதிகமாயின. கள்ள மதுவைத் தடுக்க முடியவில்லை. கள்ளக் கடத்தல் அதிகமாயிற்று. மது

விலக்கை அமல்நடத்த வேண்டியவர்கள் லஞ்சப் பேயானுர் கள் என்று கூறப்பட்டு 1938-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ஆம் தேதி மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட் டிருக்கிறது.

பின்லாந்து நாட்டில் 1907-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டு 1931-ஆம் ஆண்டு அந்தச் சட்டத்தின் பயனை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. குடிவெறி அதிகமாகி இருப்பதாகவும், குற்றம் புரிவோர் தொகை அதிகமாகி விட்டதாகவும் அந்தக் குழு கூறியது. அந்த முடிவின்படி 1932-ல் அந்த நாட்டில் மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

நார்வே, 1919-ல் மதுவிலக்கைக் கொண்டு வந்தது. அது 1927-ல் ரத்துச் செய்யப்பட்டது.

நியூ பவுண்ட்லாந்து, 1915-ல் மதுவிலக்கை அமல் செய்தது. 1924-ல் அதை ரத்துச் செய்தது.

துருக்கி 1920-ல் மதுவிலக்கை அமல்படுத்தியது. 1924-ல் அதை ரத்துச் செய்தது மாத்திரமல்ல; 1926-ல் அரசாங்கமே அந்த வியாபாரத்தை மேற்கொண்டது.

நான் முஸ்லீம் லீக் உறுப்பினர்களுக்கு ஒன்றை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக மானுலும், காங்கிரசானுலும், கம்யூனிஸ்டானுலும், முஸ்லீம் லீக்கானுலும், பி.எஸ்.பி. கட்சியானுலும், தமிழரசுக் கழகம் ஆனுலும், சுதந்திராவானுலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானுலும் தமிழக அரசைப் பொறுத்த வரை யில் மதுவிலக்கு, கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதை நாம் யாரும் மறுக்கவில்லை. அதில் இருவேறு கருத்துக்களுக்கு இடம் இல்லை. ஆனுல் அதைச் சட்டபூர்வமாக அமல்படுத்திவிட முடிந்ததா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மத அடிப்படையில் மதுவிலக்கு....

அன்றே சொன்னேன். முஸ்லீம் மத அடிப்படையில் மதுவிலக்குக் கொள்கையைப் பொன்னேபோல் போற்ற வேண்டிய துருக்கி, சிரியா, ஈராக், ஈரான், எகிப்து, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா ஆகிய முஸ்லிம் நாடுகளில் சட்டபூர்வமாக மதுவிலக்கை அமல்படுத்த முடியவில்லை. அங்கெல்லாம் சட்டம் இல்லை என்பதற்காக நாட்டு மக்கள் அத்தனைபேரும் குடித்துக்கொண்டிருக்கிருர் கள் என்று வாதிடவில்லை. அங்கேயும் தங்களது மத

மார்க்கத்திற்கு விரோதமான வகையில் இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறுர்கள். உண்மையில் ஆதரவு இல்லே.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப்.—அரேபிய தேசத்தில் மதுவிலக்கு அமலில் இருக்கிறது என்பதைக் கூற விரும்பு கிறேன்.

முதல்வர்.—அரேபிய தேசத்தில் மட்டுமிருந்தால் போதாது என்பது என் வாதம்.

இங்கும் சட்டம் தளர்த்தப்படுவதன் மூலம் இந்தியப் பேரரசு இந்தியப் பூபாகம் முழுமைக்கும் மதுவிலக்கை அமல்படுத்த முன்வருகிற நாள் வரை நாம் அந்தச் சட்டத்தை ரத்துச் செய்வது என்பது கூட இல்லே—அதற்கு ஒய்வு கொடுப்பதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனே பேரும் குடிகாரர்களாக மாறிவிடுவார்கள் என்று நாம்கூறிட முடியாது. அந்தக் கருத்தைத்தான் முஸ்லீம் லீக் உறுப்பினர் மொய்தீன் அவர்கள் எடுத்துக் காட்டினுர்கள்.




மதுவிலக்கைப் பற்றி ஆராய்வதற்காக நீதிபதி தேக்சந்த் என்பவர் தலைமையில் மத்திய திட்டக் குழு ஒரு கமிட்டியை 1963-ல் நிறுவியது. இந்தக் கமிட்டி ஏன் நிறுவப்பட்டது என்முல் 1956-ல் நாடாளு மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

" This House is the opinion that Prohibition should be regarded as an integral part of the Second Five Year Plan and recommands that the Planning Commission shouldformulate the necessary programme to bring about nation-wide Prohibition speedily and effectively".

''இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரிக்க முடியாத அம்சமாக மதுவிலக்கு கருதப்படவேண்டும் என்று இந்த அவை கருதுகிறது. எனவே நாடு முழுவதும் தீவிரமாகவும் திறமையாகவும் மதுவிலக்கை அமல்படுத்தத் தேவையான நடைமுறைகளே வகுக்குமாறு திட்டக் குழுவுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது''.

## மத்திய அரசால் செயல்படுத்த முடிந்ததா?

1963-ஆம் ஆண்டிலே இந்தக் குழு அமைக்கப்பட்டு, நாடு முழுவதிலும் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். பல்வேறு ஆராய்ச்சிகளை இக்குழு நடத்தியது. 1963-லே ஓர் அறிக்கையைக் கொடுத்தது, அந்தக் கமிட்டியார் என்ன என்ன சிபாரிசுகளைச் செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதில் முக்கியமான சிபாரிசு காது மருந்துகளில் ஆல்கஹால் இருக்கிறது. ஒரு மாநிலத்தில் மாத்திரம் ஆயிரக் கணக்கான பவுண்டுகள் அந்த மருந்து செலவாவதாகத் தெரிகிறது. ஒரு சில மாநிலங்களில் அதிக விற்பனையாகிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்தது. அடுத்தது அளவுக்கு மீறிய ஆல்கஹால் உள்ள 'டிஞ்சர்' உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கமிட்டி சிபாரிசு செய்தது. இவையெல்லாம் மத்திய அரசால் செயல்படுத்த முடியவில்லை.

மருந்துகள் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யவேண்டுமென்று 'தேக்சந்த் கமிட்டி' கூறியது. அதையும் மத்திய அரசு காது கொடுத்துக் கேட்கவில்லை. அஸ்வா, அரிஷ்டம் ஆகிய மருந்துகள் முறைப்படி தயாரிக்கப்பட்டால் அதில் 10 முதல் 12 பர்சென்ட் 'ஆல்கஹால்' தான் இருக்க முடியும். ஆனால் 80 முதல் 90 பர்சென்ட் வரை ஆல்கஹால் உள்ள அரிஷ்டங்கள், அஸ்வா போன்ற மருந்துகள் விற்பனைக்கு வருகின்றன. இதற்கு 'டிரக்ஸ் ஆக்ட்' திருத்தப்பட வேண்டும், என்று 'தேக்சந்த் கமிட்டி' கூறியது. அது செய்யப்படவில்லை.

## கள் குடிக்கக் கட்டுப்பாடுகள்.

அடுத்து, 'கள்ளச் சாராயத்தைவிடக் கள் ஆபத்து குறைந்தது' என்று அந்தக் கமிட்டி கூறியது. சில பாதுகாப்புகளுடன் கள்ளை அனுமதிக்கலாம் என்றும் அது கூறியது. கமிட்டியின் குறிக்கோள் மதுவிலக்குதான். ஆனால் இடையில் சில சிபாரிசுகளைக் கூறியது. அவை 5 சதவிகிதம் ஆல்கஹால் உள்ள கள்ளை அனுமதிக்கலாம். கள் புளித்து விடாமல் இருக்கக் குளிர்பதனச் சாதனங்களைப் பயன்படுத்தலாம். விற்பனையாகும் இடங்களில் மட்டுமே குடிக்க வேண்டும். வீட்டிற்கு எடுத்துச் சென்று குடிக்கத் தடை விதிக்க வேண்டும். கள் மீதுள்ள 'தீர்வை' குறைவாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் கள்ளச் சாராயத்தை நாடிப் போகமாட்டார்கள், எனப் பல சிபாரிசுகளை அந்தக் கமிட்டி செய்தது.

### சட்ட அமலும் சாராய விற்பனையும்.

நாடு முழுவதிலும் உள்ள கள்ளச் சாராயத்தின் விற்பனைக் கணக்குகளை அந்தக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. 1963–64-ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் கள்ளச் சாராய விற்பனை 52 கோடி ரூபாய். அதில் மது அருந்துகிற மாநிலங்களில் விற்பனை 9 கோடி ரூபாய். மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கின்ற மாநிலங்களில் கள்ளச் சாராய விற்பனை 43 கோடி ரூபாய். மொத்தம் 52 கோடியில் மது அருந்துகிற மாநிலங்களில் 9 கோடி ரூபாய்; மதுவிலக்கு அமலில் உள்ள மாநிலங்களில் 43 கோடி ரூபாய் விற்பனையாகிறது. இதில் கள்ளச் சாராயம் மாத்திரமே சேர்க்கப்பட்டிருக்கிறது. இதர மது வகையறுக்கள் சேர்க்கப்படவில்லை. இது அரசாங்கத்திற்கு வராமல் போகிற பணம் என்பதையும் அந்தக் குழு சுட்டிக் காட்டியிருக்கிறது.

### மதுவிலக்கும், மக்கட்தொகை பெருக்கமும்.

அடுத்து 'வெட் ஏரியா'வில் மதுவிலக்கிற்கு முன்பு 100 யூனிட்டுகளாக இருக்குமானால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் 20 சதவிகித மக்கட் தொகை அதிகரிப்பதற்கும் இதர நிலைகளுக்கும் பிறகு, அது 130 யூனிட்டாக உயர்ந்திருக்கிறது. 'டிரை ஏரியா'வில் 100 யூனிட்டாக இருந்தது பத்தாண்டுகளுக்குப் பின்பு 90 யூனிட்டாகக் குறைந்திருக்கிறது என்பதையும், இது எல்லாம் கள்ள மது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது எனவும் தேக்சந்த் குழு கூறியுள்ளது.

நாடெங்கும் மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை தந்த விவரங்கள்தான் நான் குறிப்பிட்டவை.

### மதுவிலக்கும், காங்கிரஸ் கட்சியும்.

1957-ஆம் ஆண்டும், 1962-ஆம் ஆண்டும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தின்போது என்ன அறிக்கைகளை வெளியிட்டார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"Prohibition has long been the Congress policy and it has been introduced in some parts of the country. Progressive steps will be taken to introduce it in other parts."

**"மதுவிலக்கு நீண்ட காலமாகவே காங்கிரசின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது; அது நாட்டின் சில பகுதிகளில் அமுலாக்கவும்பட்டிருக்கிறது. அதை நாட்டின் மற்றப் பாகங்களிலும் அமல்படுத்தவும் முற்போக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்."**

**இது 1957-ஆம் ஆண்டின் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை.**

"The Congress Policy of Prohibition should be maintained nd encouraged."

''காங்கிரசின் மதுவிலக்குக் கொள்கை பேணப்பட வேண்டும்; ஊக்குவிக்கப்பட வேண்டும்!''—

இது 1962-ஆம் ஆண்டின் காங்கிரஸ் அறிக்கை.

மதுவிலக்கும், மராட்டிய மாநிலமும்.

1962-ஆம் ஆண்டு காங்கிரஸ் அறிக்கைக்குப் பிறகு மராட்டிய மாநிலத்தில் முதலமைச்சர் அவர்கள் சட்ட சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். 1963-ல் அதாவது 'தேக்சந்த் கமிட்டி' நிறுவப்பட்ட சில மாதங்களுக்குப் பிறகு, மதுவிலக்குக் கொள்கையை மராட்டியம் தளர்த்தத் தொடங்கியது. அப்போது மாநில முதலமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

மராட்டிய முதல்வர் 1963 டிசம்பர் 31-ஆம் தேதி அறிவித்தது இது:

Beverages with an alcoholic content not exceeding 3·5 percent will be made freely available.

Toddy with alcoholic content not exceeding 3·5 percent will be made freely available.

3·5 சதவிகிதத்துக்கு மேற்படாத போதைப் பொருள் உள்ள குடிவகைகள் தாராளமாகக் கிடைக்கும்.



3·5 சதவிகிதத்துக்கு மேற்படாத போதைப் பொருள் உள்ள கள் தாராளமாகக் கிடைக்கும் என்கிற அளவுக்கு மராட்டிய மாநிலத்தில் மது விலக்கு தளர்த்தப்பட்டது.

மராட்டிய முதல்வர் மேலும் கூறியதாவது :

"However, the experience of the implementation of this policy over the last 14 years compels us to take a more realistic and rational view of the situation as it has developed. We find that the biggest factor which works against Prohibition is not the consumer who is only the victim of the evil of drinking but illicit distillor, the bottlegger and trafficker."

''கடந்த 14 ஆண்டுகளாக மதுவிலக்கை அமல் படுத்தியதில் ஏற்பட்ட அனுபவத்தினுல் மேலும் யதார்த்த மான ஒரு கண்ணேட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையை உருவாக்கியிருக்கிறது. மதுவிலக்குக்கு எதிரான பெரும் அம்சம், குடிப்பவர்கள் அல்ல—அவர்கள் பழக்கத்துக்கு இரையானவர்கள். ஆனுல் கள்ளச் சாராயம் காய்ச்சு வோர்—கடத்தல்காரர்—விற்பனையாளர்கள் இவர்கள்தான் மதுவிலக்குக் கொள்கையின் எதிரிகள்'' என்று பேசி, 63-ஆம் ஆண்டு மதுவிலக்குக் கொள்கை மராட்டியத்தில் தளர்த்தப் பட்டது.

### அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தமிழ்நாடு காங்கிரசின் கருத்து.

1968-ஆம் ஆண்டு குனஹா நகரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் தேசம் முழுவதும் பூரண மதுவிலக்கு அமல் செய்ய ஏழு ஆண்டுக் காலம் அவகாசம் தரவேண்டும் என்ற ஒரு திருத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது திரு. நிஜலிங்கப்பா அவர்கள்தான் தலைவராக இருந்தார். திரு. சி. சுப்பிர மணியம் தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக இருந்தார். திருமதி சுசீலா நய்யார் போன்ற காந்தியடிகளைப் பின்பற்றிய வீராங் கனைகளும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் 1968-ல் இருந்து இன்னும் 7 ஆண்டுக் காலத்தில் இந்தியா முழுமையிலும் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்பது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், மது விலக்குப் பிரச்சினையை உணர்ச்சிப்பூர்வமாக அணுகக்கூடாது என்றும், நடைமுறையில் அமல் செய்யும் வகையில் அணுக வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அந்த நேரத்தில் தமிழ் நாட்டிலே உள்ள ஒரு பத்திரிகை எழுதிய தலை யங்கத்தைத் தலைவரின் அனுமதியோடு படித்துக் காட்டு கிறேன்.

### இந்த நாளிதழ் அன்று என்ன எழுதியது ?

''பஞ்ஜியில் நடைபெறும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும், அதற்கு முன்னுல் நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்திலும் மதுவிலக்கு பற்றிக்

காரசாரமான விவாதங்கள் நடைபெற்றிருப்பதில் வியப்பில்லை. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் மதுவிலக்கினை ஒரு அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளோம். நமது அரசியல் சட்டமும் கட்டளைக் கொள்கைகள் பகுதியில் அதைத் தெளிவாக வற்புறுத்தியுள்ளது.

ஒன்றைக் கொள்கையளவில் ஒப்புக் கொள்வது வேறு; அதை நடைமுறையில் அமல் செய்வது பற்றி அபிப்பிராய பேதங்கள் எழுவது வேறு.

பூரண மதுவிலக்குக் கொள்கையினை எப்போது அமல் செய்வது, எப்படி அமல் செய்வது என்பது பற்றிக் காங்கிரஸ் மேலிடத்தில் நிலவிடும் கருத்து வேற்றுமையினை யாரும் பெரிதுபடுத்தத் தேவையில்லை.

மதுவிலக்கு என்பது வெறும் ஒழுக்கக் கோட்பாடு மட்டுமல்ல. அதற்குப் பின்னே பொருளாதார விளைவுகளும் உண்டு. எனவே, மதுவிலக்கினை அமல் செய்யும் விஷயத்தில் பல்வேறு ராஜ்ய முதல்வர்களும் காட்டியுள்ள தயக்கத்தினை அலட்சியப்படுத்தவோ அல்லது மதுவிலக்கு விஷயத்தில் அவர்கள் தேவையான ஆர்வம் காட்டத் தவறிவிட்டார்கள் என்று விமர்சிப்பதோ அவர்களுக்கு நியாயம் வழங்கியது ஆகாது.

பூரண மதுவிலக்கோ அல்லது பகுதி மதுவிலக்கோ அமலாகும் ராஜ்யங்களிலேகூட அது முழு வெற்றியடைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. உதாரணமாகப் பூரண மதுவிலக்கு நடைமுறையிலிருக்கும் தமிழகத்தில் மது இறக்குவதும், விற்பதும் சட்டப்படி தடைப்படுத்தப்பட்ட காரியங்கள் ஆனாலும், ஆங்காங்கே பரவலான குடிசைத் தொழிலாக அது அமோகமாக நடைபெற்று வருவதைச் சட்டம் கண்ணை மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். இப்படி ஒரு சட்டத்தையும் போட்டு, அது மீறப்படுவதைக் கையாலாகாத்தனத்தோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதை விட அப்படியொரு சட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதே விவேகமான செயலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தவிர மதுவின் தீமையையும் ஒழிக்க முடியாமல் அதனால் கிடைக்கும் வருமானத்தையும் இழப்பது, ஒழுக்கம், நிதி ஆகிய இரண்டு முனைகளிலும் பெரு நஷ்டம் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

கௌரவப் பிரச்சினையாகக் கருதிச் சில பல திட்டங்களை மேற்கொள்ளுவதை விட சமூகநலனுக்காகச் சாத்தியக் கூறுகளை மனத்தில் கொண்டு திட்டமிடுவதும் செயல்படுத்துவதும் வரவேற்கக் கூடியதாகும்.

மதுவிலக்கு கூடாது என்பதல்ல நமது வாதம், ஒழுங்காக அமல் செய்ய முடியவில்லையானல், நிதிநிலை வசதி கருதி அதைக் கைவிடுவதுகூடத் தவறு அல்ல என்பதே நமதுநிலை.''

இது 'நவசக்தி'யின் தலையங்கம். 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் தேதியன்று 'நவசக்தி' பத்திரிகையில் எழுதியுள்ள தலையங்கம்.

ஆனல் இன்றைக்கு வேறே எழுதுவார்கள். எனினும் அன்றைக்குக் கைவிட்டுவிடுவது சாலப்பொருத்தம் என்றும், மாநில முதல்வர்களே பலர் அலட்சியப்படுத்தும் காரணத்தாலும், ஆர்வம் காட்டவில்லை என்பதாலும் அவர்கள் மீது குற்றம் கூறக் கூடாது என்றும் அன்றைக்கு 'நவசக்தி' பத்திரிகை எழுதியிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அன்று அண்ணவுக்கு மாசு தேடியோர்
இன்று அண்ணவைப் பற்றிப் பேசுகிருர்கள்.

அண்ணவைப் பற்றிச் சொன்னர்கள். அண்ண வழியிலே வந்தவர்கள், அண்ணவின் வழியில் முழுக்க முழுக்கப் பின் செல்லுபவர்கள், அதை மீறிப்போகலாமா என்றெல்லாம் கேட்டார்கள்.

அண்ணவின் ஆன்மா கண்ணீர் விடும். அண்ணவின் ஆன்மா சபிக்கும் என்று காங்கிரஸ் உறுப்பினர்களும் பேசினர்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். அண்ண அவர்கள் தீவிரமாக மதுவிலக்கை அமல் படுத்துவதாகச் சொன்ன போது குன்ஹா நகர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், சட்டமன்றத் தின் முன்னள் கொறடா என்ன பேசினர் தெரியுமா?

''குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக்கூடாது, அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக்கூடாது என்று தமிழக முதன் மந்திரி உத்தரவிட்டுள்ளதாக'' அவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் குற்றஞ் சாட்டினர்.

மதுவிலக்குக் குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக் கூடாது அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக்கூடாது என்று தமிழக முதன் மந்திரி (அப்பொழுது அண்ண முத லமைச்சர்) உத்தரவிட்டுள்ளதாகவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சொன்னர். அண்ண தீவிரமாக மதுவிலக்கை அமல்படுத்துவதாகச் சொல்வதற் காக அவருக்குப் பரிசாக அந்தப் பேச்சு அமைந்திருந்தது!

இப்பொழுது வேண்டுமென்றே அண்ணவை இழுக்கிருர் கள். அண்ணவின் கொள்கையை மீறி விட்டீர்கள். 'நீ யார்?' என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள்.

நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் ஐந்தாண்டுக்காலத்தில் தமிழகத்திலுள்ள அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழ்தான் பாடமொழியாக இருக்கும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

அந்தத் தீர்மானத்தை நாங்கள் அமல் படுத்துவதற்காகச் செயல் வடிவத்திற்குக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் எழுந்த கிளர்ச்சிகளை நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல

அதற்காக 'லட்சுமணசாமி முதலியார் கமிட்டி' போடப்பட்டது. அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்குப் புறம்பாகத் தமிழகம் முழுவதும் எல்லா இடங்களிலும் தமிழே பாட மொழியாக இருக்கும் என்பதற்கு மாறாக—லட்சுமணசாமி முதலியார் சிபாரிசின் அடிப்படையிலே இன்றைய தினம் அரசுக் கல்லூரிகளில் கூட ஆங்கிலத்தைப் பாட மொழியாக விரும்புகிறவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நிலையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றால், அண்ணா அவர்கள் காலத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை என்ன செய்தீர்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்க வேண்டாமா? கேட்கவில்லை, காரணம், அவருக்குச் சாதகமான விஷயம்.

அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்; கால வேறுபாடு, கால மாறுபாடு, நாட்டு நிலைகளை உணர்ந்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து முடிவெடுத்து, அந்தத் தீர்மானத்தைக் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுதும்கூட மதுவிலக்கை ஒத்தி வைத்திருக்கிறோம் என்றுதான் சொல்கிறோம்.

சுதந்திராக் கட்சியின் சார்பிலும் சிலர் மதுவிலக்கை ரத்துச் செய்வதை வரவேற்கிறார்கள். சாதிக் அலி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவரும் மேலவையிலே வரவேற்றிருக்கிறார். கீழவையில் எதிர்க்கிறார்கள். மேலவையில் திரு ஈசுவரமூர்த்தி அவர்கள் வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

கடைசியாக நம்முடைய திரு பொன்னப்ப நாடார் அவர்களும் என்ன பேசினார்கள்? மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யக்கூடாது என்ற கருத்தைப் பேசிவிட்டுக் கடைசியாக "சட்டத்தைப் போடுங்கள். ஜாக்கிரதையாக இருங்கள்" என்று சேலத்தைச் சுட்டிக் காட்டி, ஒத்தி வைத்ததற்கு அவரும் அனுசரணையாகத்தான் வந்தார் . . . . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்.**—தலைவரவர்களே, நான் அனுசரணையாக இல்லை என்ற தன்னிலை விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு இருக்க வேண்டு

மென்று பரிபூரணமாக நம்புகிறேன். அதற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பு அல்ல.

முதல்வர்.—களங்கம் கற்பிக்கவும் மாட்டேன். காட்டிக் கொடுக்கவும் மாட்டேன்.

டாக்டர் ஹாண்டே.—இந்த குறிப்பிட்ட பிரச்சினையில் அண்ணாவின் பாதையிலிருந்து மாறுவதேன் என்பதுதான் எனது கேள்வி. இது தவிர மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு ஆதரவாக முதல்வர் அற்புதமான உரை ஆற்றியிருக்கிறார். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல் என்ன என்பதே என் கேள்வி.

## அண்ணா வழி என்ன?

முதல்வர்.—அண்ணா வழி ஒரு நல்ல ஜனநாயக வழி. அதைப் பின்பற்றுபவர்கள் நாஙகள். ஜனநாயக வழிகளில் ஒரு காலத்திலே சொல்லப்பட்ட கருத்துக்கள் வேறொரு காலத்திலே பரிசீலிக்கப்படலாம். அண்ணா அவர்கள் திராவிட நாடு கொள்கையில் அழுத்தந் திருத்தமாக இருந்தார்கள். பிறகு நாட்டின் நிலை, இந்தியாவின் பாதுகாப்பு இவைகளை உத்தேசித்துத் திராவிட நாடு கொள்கையை மறு பரிசீலனை செய்வதற்காகப் பொதுக் குழுவைக் கூட்டினார்கள். பொதுக்குழு ஆராய்ந்து, பரிசீலித்து, பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட வேண்டுமென்று கூறியது. அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலை வணங்கி அதை ஏற்றுக் கொண்டார்கள்.



சனநாயகவழி

அதைத்தான் நாங்களும் கடைப்பிடித்து வந்தோம்; மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று பொதுக்குழு விரும்பியது பொதுக்குழு அமைச்சரவைக்கு இட்ட கட்டளைக்கு நாங்கள் தலை வணங்கினோம்.

அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலைவணங்கினார்கள். நாங்களும் ஜனநாயகத்திற்குத் தலைவணங்குகிறோம். ஆகவே, இது அண்ணா வழி தானே தவிர, வேறல்ல.

180395 X41.211'N72 ← N71y3 31141.3

டாக்டர் எச். வி. ஹாண்டே.—அண்ணுவிற்கு மதிப்பளிக்க வில்லை, பொதுக்குழுவிற்குத்தான் மதிப்பளித்திருக்கிறீர்கள்,

முதல்வர்.—அண்ணு வணங்கிய பொதுக் குழுவிற்கு நாங்கள் தலைவணங்குகிறேம். நாங்கள் கல்கித் தோட்டத் திற்கு மாத்திரம் தலை வணங்குபவர்கள் அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—அண்ணுவின் பெயரைச் சொல்லி ஊரை ஏமாற்றுகிருர்கள்.

(பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினுர்கள்.)

பேரவைத் தலைவர்.—அதை அவை நடவடிக்கைக் குறிப்பி லிருந்து எடுத்து விடலாம்.

முதல்வர்.—தயவுசெய்து வேண்டாம். அண்ணுவின் பெயரைச் சொல்லி நாங்கள் ஊரை ஏமாற்றுகிறேம் என்று அவர்கள் சொல்லுகிருர்கள். நாங்கள் ஊரை ஏமாற்று கிறேமா, இல்லையா என்பது ஊருக்குத் தெரியும். உளறு வாயர்களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை.

('ஷேம், ஷேம்' என்ற குரல்கள்.)

டாக்டர் எச். வி. ஹாண்டே.—சொல்வதற்கு உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது?

(பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று சொல்லிக் கொண்டு எழுந்து நின்றுர்கள்.)

பேரவைத் தலைவர்.—எல்லாரையும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். ஊரை ஏமாற்றுகிருர்கள் என்று சொல்வதைச் சபைக் குறிப்பிலே இருக்கலாம் என்று முதலமைச்சரவர்கள் பெருந்தன்மையுடன் கூறியதால், என்ன வேண்டுமானுலும் சொல்லலாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கருதிக் கொண்டிருக்கிருர்கள். இப் பொழுது அவர் சொல்லியதை 'என்ன யோக்கியதை' என்று சொல்லியதைத் திரும்பப் பெற வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—எதை வாபஸ் வாங்க வேண்டும்?

பேரவைத் தலைவர்.—'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று சொல்லுவதை இந்த மன்றத்தின் மரபுக்கு முரணுன வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டும்.

அமைச்சர் அன்பழகன்.—கனம் உறுப்பினர் அவர்கள் முதலில் அவைத் தலைவருக்குப் பணிய வேண்டும். அதன் பின்னரே, அவர் விளக்கம் எதுவும் தர விரும்பினுல் அதைத் தனிப்பட்ட முறையிலே அவைத் தலைவரிடம் தெரிவிக்கலாம். அவைக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. அவர் தன் உணர்ச்சிகளை இங்கே பரிமாற வேண்டியதுமில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் . . . . . . . . . . .

### யார் உணர்ச்சியையும் புண்படுத்தமாட்டோம் !

முதல்வர்.—நான் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வது நல்லது அல்ல என்ற கருத்தை-உணர்ச்சியை எப் பொழுதும் புண்படுத்த விரும்பவில்லை.

டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் வேண்டுமானால் எங்கள் உணர்ச்சிகளைப் புண்படுத்த விரும்பலாம். ஆனால் நான் யாருடைய உணர்ச்சியையும் புண்படுத்த விரும்பவில்லை.

மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசினார்களே, அது திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல! தமிழரசுக் கழகத்தின் சார்பிலே சொல்லப்பட்டதும் முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? பி.சோ. கட்சியினர் கூறிய கருத்து முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல!

அவர்களெல்லாம் உள்ளபடியே மதுவிலக்கில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவேதான் உணர்ச்சி பூர்வமாகப் பேசினார்கள். அந்த உணர்ச்சிகளுக்கு நான் என்றைக்கும் மதிப்பளிக்கத் தயாராக இருக்கிறேன்.

அதே நேரத்தில் நாம் ஒருவருக்கொருவர் மதிப்பளிப்பதற்குத் தயாராகிக்கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் மரியாதை கொடுக்கத் தயாராகிக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு அண்ணாவின் வழியைப் பின்பற்றுகிறோம் என்று சொன்னால்—அண்ணாவின் வழி ஜனநாயக வழி; அந்த ஜனநாயக வழியைப் பின்பற்றுகிறோம். எந்தக் கருத்தையும் பொதுக் குழுவில் வைத்துப் பொதுக் குழுவின் கட்டளையை ஏற்றுக் கொள்வதுதான் அண்ணாவின் வழியாகும்.

அதே வழியைப் பின்பற்றித்தான் இந்தக் கொள்கையைப் பற்றிப் பொதுக் குழுவின் முன்னால் வைத்து ஆய்ந்து, பொதுக்குழுவின் கட்டளையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே இது அண்ணலின் வழியா, அண்ணலின் வழியா என்று கேட்டால் இந்தியாவில் இருக்கிற காங்கிரஸ் முதலமைச்சர்கள் மதுவிலக்கை ரத்து செய்து விட்டதால் அவர்கள் எல்லாம் காந்திய வழியில் நம்பிக்கையற்றவர்கள் என்று அர்த்தம்?

### மதுவிலக்கில் விதிவிலக்கு

அன்று திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் 'சில பேருக்காவது மதுவிலக்கில் இருந்து விதிவிலக்கு செய்தாக வேண்டும். இராணுவ வீரர்களுக்கு மது கிடைக்கச் செய்யவேண்டும். இதில் எல்லாம் காந்தியைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு காலத்தில் காந்தியார் இராணுவமே வேண்டாமென்று சொன்னார்கள். இராணுவமே இல்லாமல் இந்தியா வாழ முடியுமா? ஆகவே, மது அருந்தும் உரிமைகள் இராணுவத்திற்கு அளித்தாக வேண்டும்' என்று குல்ஹாபூரில் நடந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டிலே பேசினார்.

இவர்கள் எல்லாம் பழைய காங்கிரசாக இருந்த போதுதான் மராட்டியத்திலே மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டது. மைசூரிலே மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டது. ஆந்திராவிலே மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டது. வேறு எந்த மாநிலத்தில் மதுவிலக்கு ரத்துச் செய்யப்படாமல் இருக்கிறது?

அவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் அவர்கள் காந்திய வழிக்குப் புறம்பாக, காந்திக்கு மரியாதை தரக்கூடாது என்று செய்தார்கள்?

### அண்ணா எங்களை விட்டுவிடமாட்டார்!

அந்த அளவிலே இந்த அரசை, இந்த அரசில் இருக்கும் அமைச்சர்களை, அண்ணாவால் தயாரிக்கப்பட்ட எங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணாவின் பெயரைப் பயன்படுத்தி எங்கள் மீது குற்றஞ்சாட்ட விரும்புகிறார்கள். அதற்கும் எங்கள் அண்ணாவைப் பயன்படுத்தி எங்களை ஒழித்து விடலாம் என்று நினைக்காதீர்கள். எங்கள் அண்ணன் எங்களை அவ்வளவு சாதாரணமாக விட்டுவிடமாட்டார்.

### அவலங்களை நிறுத்தத்தான் ... ... ..!

கடைசிப் பகுதியை அவலம் (டிராஜடி) என்றார்கள். மதுவிலக்கு அமலில் இருந்தபோது எவ்வளவு அவலங்கள் நடந்திருக்கின்றன?

இதே சென்னையில் 7—8—1967 அன்று வார்னிஷ் குடித்து 113 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 51 பேர் இறந்தார்கள்.

காஞ்சிபுரத்தில் 145 பேர் வார்னிஷ் சாப்பிட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 24 பேர் இறந்தார்கள்.

செங்கற்பட்டில் 151 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு 14 பேர் இறந்தார்கள்.

வாலாஜாபாத்தில் 84 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு 14 பேர் இறந்தார்கள்.

அந்த அவலங்களை நிறுத்தத்தான் இந்த 'டிராஜடி' என்ருல், நான் இது 'டிராஜடி' என்பதை உள்ளபடியே ஏற்றுக் கொள்கிறேன்.

## தோல்வியை ஒத்துக்கொள்கிருேம்.

மதுவிலக்கு தோல்வியுற்று விட்டது. அந்தச் சட்டம் இங்கே வெற்றிகரமாக நடைபெற முடியவில்லை என்பதை இதற்கு முன் இருந்த அமைச்சர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். நாங்கள் அதைத் தாராளமாக ஒத்துக் கொள்கிருேம்.

அண்ணு உயிரோடு இருந்த நேரத்திலே தென்னை மரத் திலிருந்து பதநீர் இறக்குவதற்கு அனுமதி கொடுத்தார்கள். ஆனுல் அது பதநீராக இறக்கப்படாமல் கிட்டத்தட்ட கள்ளைப் போன்று இறக்கப்பட்டு வந்தது. கிட்டத் தட்ட மதுவிலக்கை ரத்துச் செய்தது போன்றது தான் இது. இதை அனுபவத்தில் கண்டதால் நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் அந்த அனுமதியை ரத்துச் செய்து ஓர் உத்தரவு போட்டேன். உடனே அத்தனைபேரும் கோர்ட்டிற்குப் போனுர்கள். அந்த உத்தரவை அமல் செய்ய முடிய வில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் வளர வளரத்தான் வேறு வழியில்லாமல் இந்த முடிவிற்கு வந்திருக்கிருேமே யல்லாமல் மாண்புமிகு உறுப்பினரின் உணர்ச்சிக்கு நாங் கள் கட்டுப்படாதவர்கள் அல்ல. யாருடைய உணர்ச்சிக ளையும் நாங்கள் மதிக்காதவர்கள் அல்ல.

## கள்ளைப் பற்றிக் கம்பராமாயணம் !

சுதந்திராக் கட்சியின் சார்பில் நம்முடைய பெரியவர் சா. கணேசன் வெகு உருக்கமாகப் பேசினுர். வள்ளுவர் பிறந்த நாட்டிலே குடி இருக்கலாமா என்று கேட்டார்கள். வள்ளுவர் பிறந்த நாட்டிலேதான் கம்பர் இராமாயணம் எழுதினுர்.

கம்ப இராமாயணத்திலே கம்பர், மாதர்களும் குடித்தார் கள் என்று எழுதியிருக்கிருர். வள்ளுவர் பிறந்து குறளை எழுதியதற்குப் பிறகு தான் கம்பர் இந்த நாட்டிலே பிறந்து இராமாயணத்தை எழுதியிருக்கிருர்.

குறளைப் படித்து அறிந்த கம்பர் எத்தனையோ இடங்களில் இராமாயணத்தில், மக்கள் கள்ளைக் குடித்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதையும் இலங்கையிலே யிருந்த அசுரர்கள் தான் மது அருந்தினார்கள்; மற்றவர்கள் அல்ல என்று வாதிக்கக்கூடும். மிதிலாபுரியிலும் குடித்தார்கள். கம்பர் பாடுகிறார்:—

பளிக்குவன் னத்து பாக்கும் பசுநறுந் தேறல் மாந்தி
வெளிப்படு நகைய வாகி, வேறென மிழற்று கின்ற
ஒளிப்பினும் ஒளிக்க ஒட்டி ஊடலை உணர்த்து மாபோல்
களிப்பினை உணர்த்தும் செவ்விக் கமலங்கள் பலவும்
கண்டார்.

என்று கம்பர் பாடியிருக்கிறார். எனக்குப் பார்த்துத்தான் படிக்கத்தெரியும்.

தமிழ்நாட்டிலேதான் கம்பர் அயோத்தியைக் கண்டார்; மிதிலையையும் கண்டார் என்று சொல்கிறார்கள். கம்பர் ராமனைக் மாத்திரம் விடுதலை செய்துவிட்டார். வால்மீகி ராமனை குடியிலிருந்து விடுதலை செய்தார். அயோத்தியாபுரி, மிதிலையை விடுதலை செய்யவில்லை.

தசரதன் மிதிலைக்குப் புறப்பட்ட பொழுது, வழியில் சந்தித்த பலர் ''மதுக் கொண்டு மாந்தர் மடவாரில் ஓதை'' என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

தசரதனுடன் சென்ற அயோத்திச் சேனைகள் கள்ளுண்டு, இன்பம் அனுபவித்து மகிழ்ந்தனர் என்று உண்டாட்டுப் படலம் கூறுகிறது. வள்ளுவர் எப்படியோ அதேபோல ஆற்றலுள்ள கம்பர் பார்த்தார்; அந்த நிலையை எடுத்துச் சொன்னார்.

கம்பரே சொல்கிறார். ஆகவே கொள்கை ரீதியில் ஒத்துக்கொள்ளவில்லை என்று கூறவில்லை. ஆனால் நிலைமைகளை எடுத்துச் சொல்கிறேன். இந்தியாவில் மட்டுமல்ல அனைத்துலகிலுமே தீமையை உணர்ந்து முயன்று பார்த்தார்கள். ஆனால் முடியவில்லை.

### இங்கிலாந்தில் உள்ளபடி இங்கும் செய்யலாமே!

சுதந்திராக் கட்சியின் தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படுகிறவரும் சிறந்த மேதையுமான பேராசிரியர் எம். ரத்தினசாமி எம். பி. அவர்கள் ஒரு கட்டுரையை எழுதி, அதை நம்முடைய சுகாதார அமைச்சருக்கும், தொழில் அமைச்சருக்கும், சட்ட அமைச்சருக்கும், அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கட்டுரையில் அவர் என்ன குறிப்பிட்டடிருக்கிறார்? ''நம் நாட்டுக் கள்ளுக்கடை அசுத்தம் மலிந்தது. வசதி

குறைந்தது. அதற்கு மாருக இங்கிலாந்திலுள்ள மதுக் கடைகளில் மேஜை, பெஞ்சு போன்ற வசதிகள் உண்டு. சுவையுள்ள சிற்றுண்டியும் அங்குக் கிடைக்கும். குடித்து விட்டு மட்டும் வெளியே வருபவனுல் ஆபத்துகள் விளைய லாம். ஆனுல் குடியோடு, சிற்றுண்டி சாப்பிட்டு, நல்ல சூழ்நிலையிலிருந்து வீட்டுக்கு வெளிவருபவனுல் ஆபத்துக் கிடையாதாம். அது மனேநிலை மாற்றம். இங்கிலாந்தில் உள்ளதை 'மதுக்கடை' என்று சொல்லுவதற்குப் பதில் 'காலம் போக்கும் விடுதி' என்று அழைப்பதேபெரிதும் பொருந் தும். அரசு நிதி வசூலிப்பதில் மட்டும் கண்ணேட்டம் செலுத்தாமல் மக்களின் நலனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்'' என்று கூறிவிட்டு ''மதுவிலக்கை ரத்துச் செய்தாலும் செய்யாவிடினும் குடிப்பவன் குடித்துக் கொண்டேதான் இருக்கிருன். நல்ல சரக்குக் கிடைக்கா விடில் கண்டதையெல்லாம் குடிக்கிருன். அவதியுறுகிருன். திரு. ராஜகோபாலாச்சாரியார் கள்ளுக்கடையைத் திறந்தால் மனைவியை அடிக்கும் குற்றம் பெருகும் என்கிருர். குடிக் காதவன் மட்டும் மனைவியை அடிக்காமலா இருக்கிருன்? பெருவாரியான குடியர்கள் மனைவியை அடிப்பதில்லை. ஆம். சட்டம் என்பது இந்தப் பெருவாரியான எண் ணிக்கையினரது நலனுக்காக அமைதல் வேண்டும்'' என்றும் பேராசிரியர் அவர்கள் எழுதியிருக்கிருர்கள்.

இன்னும் காங்கிரஸ் கட்சி தரப்பில் எந்த அடிப்படை யில் பேசினுர்கள்! ஏதோ தொலையட்டும் மதுவிலக்கை வர வேற்கிறேன் என்று நண்பர் ஈஸ்வரமூர்த்தி எடுத்துச் சொன் ஞர் என்ருல், இருக்கும் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்துச் செய்கிருேமேயல்லாமல் வேறு அல்ல. ஏதோ மது விலக்குக் கொள்கையில் எங்களுக்குப் பற்றுப்போய்விட்டது என்று தயவு செய்து யாரும் கருத வேண்டாம். நாம் நியமித்த காவல்துறை கமிஷன், நாம் ஆராயச் சொல்லாவிட் டாலும்கூட ஒழுக்கங்கள் எப்படியெல்லாம் குறைகின்றன என்பதற்குச் சில சான்றுகளைச் சொல்லி அந்த அறிக்கை யில் மதுவிலக்குப் பற்றியும் சில குறிப்புகள் எழுதினுர்கள்.

அப்போது காவல் துறைக் கமிஷன் உறுப்பினராக இருந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் மாத்திரம் மாறு பட்ட குறிப்பை எழுதினுர்கள். மற்றவர்கள் எல்லாம் இருக்கும் நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டி எழுதியிருக் கிருர்கள். ஆகவே அவைகளை எல்லாம் நாம் மறந்து விடக்கூடாது என்று உங்களை மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு 1967-ஆம் ஆண்டிலிருந்து மதுவிலக்குக் குற் றத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்கள் தொகை நமக்குத் தெரிகிறது. இந்த ஆண்டு மாத்திரம் இந்தக்

குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்கள் கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் பேர். இன்றைக்குச் சிறையில் இருப்பவர்கள் கிட்டத்தட்ட 2,000 பேர். அதில் 164 பேர் பெண்களும் இருக்கிருர்கள். (கம்ப ராமாயணத்தைப்பின்பற்றியவர்கள்.)

பெர்மிட்டுகள் பெற்றவர்களில் பெண்களும் இருக்கிருர்கள். ஏறக்குறைய 150 பெண்கள் பெர்மிட் பெற்றிருக்கிருர்கள். மதுவைக் குடிக்கிற நேரத்தில் வாய் கமழுகிற மணத்தை நான் அறியாதவன் அல்ல. எல்லோரையும் சொல்லவில்லே. சிலரிடையே அந்த மணம் கமழ்வதைக் காணுதவன் அல்ல. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலே. கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் பேர் இன்றைய தினம் கைது செய்யப்பட்டார்கள் என்ருல் அதில் கைது செய்யப்படாமல் தப்பியவர்கள் எத்தனே பேர்?

ஒரு வழக்கில் 10 பேர் என்ருலும், போலீஸ் இலாகாக் கணக்குப்படி 27 லட்சம் பேர் குடித்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் அரிஷ்டம் சாப்பிட்டோ, கள்ளச் சாராயம் காய்ச்சியோ, வேறு போதைப் பொருள்கள் சாப்பிட்டோ லட்சம் பேர் அந்தக் குற்றத்தைச் செய்கிருர்கள். அவர்களால் வர வேண்டிய வருமானம் நமக்கு வரவில்லே. யார் யாருக்கோ போய் விடுகிறது.

### வேதனேயான முடிவு.

ஒரு நாளேக்கு ரூ. 5 லட்சம் என்று கணக்கிட்டால் மாதம் ஒன்றுக்கு ஒன்றேகால் கோடி அல்லது ஒன்றேமுக்கால் கோடி! ஆண்டுக்குக் கிட்டத்தட்ட ரூ. 20 கோடி வருமானம். இந்த வருமானம் எங்கே போகிறது? எங்கோ போகிற வருமானம் அரசுக்கு வரட்டும் என்ற முடிவே தவிர அவர்களேத் திருத்த முடியவில்லே.

இங்கு குன்றக்குடி அடிகளார் அவர்களும், திரு எம். சங்கரலிங்கம் அவர்களும் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். மதுவைச் சாப்பிட்ட வேண்டாம் என்று அறிவுரை செய்ய வேண்டும், மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று.

**நண்பர் ஆறுமுகசாமி குறிப்பிட்டது போல், பல ஆண்டுகள் மதுவிலக்குப் பிரச்சாரம் சரிவர நடைபெருமல் இந்த அளவில் தீமைகள் ஏற்பட்டன. ஆகவே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டாலும் அதன் விளேவு, தீமைகள், அதிகக் குடியால் ஏற்படக் கூடிய தீமைகள் இவைகளேப் பற்றிப் பிரச்சாரம் செய்வதில் இந்த அரசு முனேந்து நிற்கும். அதற்**

காக முனைந்து நிற்பவர்களுக்கு நிச்சயமாக ஆக்கம் அளிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உறுப்பினர்களின்—தோழமைக் கட்சி நண்பர்களின்—உணர்ச்சியை மதிக்கிறேன். பாராட்டுகிறேன். அவர்களில் சிலபேர் என்னைக் கெஞ்சிக் கூடக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மன்றாடிக் கேட்பதாகக்கூடச் சொன்னார்கள். அவர்களை எல்லாம்விட நான் வயதில் சிறியவன். அப்படி மன்றாடிக் கேட்டதை, கெஞ்சிக் கேட்டதைத் தயவுசெய்து திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆகவே மிக உணர்ச்சியுடன் பேசியவர்களைக்கேட்கிறேன். இது உங்களை எல்லாம் புறக்கணித்துவிட்டு, உங்கள்உருக்குகிற நெஞ்சை உதறித்தள்ளிவிட்டு, வேண்டுகோளை விழலுக்கு இறைத்த நீராக்கிவிட்டு, நீங்கள் யார் சொல்ல, நான் யார் கேட்க, என்கிற அகந்தையோடு அல்ல, மிகுந்த வருத்தத்தோடு, மிகுந்த வேதனையோடு,இருக்கிற நிலைமைகளை எண்ணி இந்த முடிவைத் தவிர வழி இல்லை என்ற காரணத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அதுவும் ஒத்தி வைத்திருக்கிறோம்.

ஆகவே,அனைவரும் சேர்ந்து இந்திய அரசைக் கட்டாயப் படுத்தவும், இந்தியா முழுமைக்கும் நீங்கள் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு 1956-ல் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினீர்களே அதை அமல்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்ளவும், அது இந்தியாவில் அமலாக்கப்படுகின்றவரையில் ஒத்தி வைப்புத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லி, இந்த ஒரு விஷயத்தில் உங்கள் வேண்டுகோளை ஏற்க முடியாமல் இருப்பதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

**இந்த நிதிநிலை அறிக்கையின் பேரில் பல கருத்துக்களை எடுத்துக் கூறிய உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, இடையில் சூடு ஏற்பட்டாலும் அந்தச் சூட்டைத் தமிழ்ப் பண்பின் காரணமாக நிச்சயமாக மறந்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உங்களுக்கெல்லாம் நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.**

4 - AUG 1971


தமிழரசு
இலவச
இணைப்பு